Ragistered as a News paper பக்கங்கள் 6 விலை ரூபா 5-00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# ஈழநாதம்

THE EELANAATHAM" மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 பங்குனி 30 (12·4·94) செவ்வாய்க்கிழமை ஓசை 53

## 12வயதுசிறுவன் பாக்குநீரிணையை நீந்திக் கடக்க முயற்சி

தமிழகத்தைச் சேர்ந்த பி. குற்றாலேஸ்வரன் (12) என்ற சிறுவன் பாக்குநீரிணையை கடக்கும் முயற்சியில் ஈடுபடவிருந்தார். தலைமன்னாருக்கும் இராமேஸ்வரத்திற்கும் இடையில் உள்ள நீரிணையை நேற்று நள்ளிரவு கடக்கும் முயற்சியில் இறங்கவிருந்தார். நேற்று நள்ளிரவு தலைமன்னாரிலிருந்து இராமேஸ்வரம் நோக்கி இச் சிறுவன் தனது நீச்சல் பயணத்தை ஆரம்பிக்கவிருந்தார். இச் சிறுவனின் பாதுகாப்பிற்காக இந்திய கடற்படைக் கப்பல், கடலோரக் காவற்படை கப்பல். ஐந்து விசைப் படகுகள் என்பன ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. சிறுவனின் நீச்சல் பயிச்சி ஆசிரியரும் ஒரு வைத்தியரும் கடற் (6ஆம் பக்கம் பார்க்க)

## பலம் வாய்ந்த புலிகளுடன் போரிட யுத்த தளபாடங்கள் அதிகம் தேவை

### சிரேஷ்ட இராணுவ அதிகாரி

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் எப்போதையும் விட இப்போது பலம்வாய்ந்தவர்களாக இருப்பதால் தமக்கு யுத்த தளபாடங்களும் வாகனங்களும் மேலும் அதிகளவில் தேவைப்படுவதாக இராணுவ வட்டாரங்கள் குறிப்பிட்டதாக கொழும்பு தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள மூன்று காலாட் படைப் பிரிவுகளை மட்டும் வைத்துக் கொண்டு பிரிகேட் அளவிலான நடவடிக்கை எதனையும் நாம் மேற்கொள்ள முடியாது என ஒரு சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் குறிப்பிட்டதாக அப் பத்திரிகை கூறுகிறது.

தரையில் நடைபெறும் யுத்தத்தில் வெற்றிபெற எமக்கு மேலும் துப்பாக்கிகள் அவசியம். டாங்கிகள் சிறப்பான (6 ஆம் பக்கம் பார்க்க)

## அவ்ரோ வட்டமிட்டது

(குருநகர்)

சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த அவ்ரோ விமானமொன்று நேற்று முற்பகல் 10-30 மணியில் இருந்து ஏறத்தாழ ஒரு மணி நேரமாக யாழ். வான் பரப்பில் சுற்றிச் சுற்றி வட்டமிட்டது.

மேற்படி விமானம் சாவகச்சேரி, மட்டுவில், பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பகுதியில் வட்டமிட்டது.

ஆலயத்தில் ஆயிரக்கணக்கில் கூடிநின்ற மக்கள் மத்தி (6 ஆம் பக்கம் பார்க்க)

## மதுறுஓயா புரட்சி எதிர்ப்பு

## தந்திரோபாய நிலையத்தில் அதிகாரிகளுக்கு விசேட பயிற்சி

(கொழும்பு)

தென்மாகாணத்தில் எல்லையுடன் உள்ள மதுறுஓயாவிலுள்ள புரட்சி எதிர்ப்பு யுத்த தந்திரோபாய நிலையத்தில் இதற்கென தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த வருட இராணுவ பின்னடைவுகள் இத்தகைய பயிற்சிகள் அவசியமானது என்பதை வலியுறுத்துவதாக அமைந்திருந்தது எனவும் அச் செய்திகள் சுட்டிக் காட்டியுள்ளன.

சிறிலங்கா ஆயுதப் படைகளுக்கு மீள ஆயுத தளபாடங்களை வழங்குவதுடன் படையை மீள ஒழுங்கமைத்தும் வருகிறோம். இராணுவத்திற்கு மேலும் பலத்தை கொடுப்பதே இதன் நோக்கம் என மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். கட்டுப் (6ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் நோயாளர் கவனத்திற்கு

நோயாளர்களுடன் கொழும்புக்குநாளை மறுதினம்வியாழன் புறப்படவிருந்த கப்பல் நாளை புறப்படவுள்ளது. எனவே கப்பலில் பயணம் செய்யும் நோயாளர்கள் இரு நாட்களுக்கு தேவையான தண்ணீர் மற்றும் உணவுடன் நண்பகல் 12 மணியளவில் யாழ். போது வைத்திய சாலைக்கு வரும்படி வைத்திய சாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

# கொழும்பு குண்டு வெடிப்புக்கு 'ஈழப்படை' உரிமைகோருகிறது

## தீவுப்பகுதிக்கு நியமனம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை. வேலணை ஆகிய பிரதேசங்களுக்கு பதில் உதவி அரசாங்க அதிபராக திருமதி பத்தினியம்மா நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக தொடர்ந்தும் பணியாற்றிக் கொண்டு மேற்குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு பதில் உதவி அரசாங்க அதிபராகப் பணி புரிவார் என்று தெரிவிக்கப்பட்டது. (தி) (இ

## 50 விடுதலைப் புலிகள் கொழும்பில் ஊடுருவல்

### புலனாய்வுத்துறை

(கொழும்பு)

வெடி மருந்துகளுடன் விடுதலைப் புலிகள் உறுப்பினர் பலர் கொழும்புக்கு ஊடுருவி இருப்பதாக சிறிலங்கா புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் நூற்றுக்கணக்கான கிலோ கொண்ட வெடி மருந்துகளை கொண்டு வந்துள்ளதாகவும் எனவே தொடர்ந்து தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளத்திட்டமிட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கல்கிஸ்சை குண்டு வெடிப்பைத் தொடர்ந்து கடலில் குதித்து தப்பித்து கொள்ள முயன்றவர் பொலிசாரினால் கைது செய் (6ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் வெடிக்கும் என எச்சரிக்கை

[கொழும்பு]

கொழும்பில் கடந்த வெள்ளி இரவும் சனி பகலும் இடம் பெற்ற குண்டு வெடிப்புகளுக்கு 'ஈழப்படை' என்னும் புதிய அமைப்பு உரிமை கோரியுள்ளது. இதனை தொலைபேசி மூலம் வெளிநாட்டு செய்தி நிறுவனத்துடன் இவ் அமைப்பு தெரிவித்துள்ளது. மேலும் இனப் பிரச்சினை தீர்க்கப்படாமல் விட்டால் எதிர்காலத்திலும் கொழும்பில் பல குண்டுகள் வெடிக்கும் எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து ஏ. எப். பி. செய்தி ஸ்தாபனம் தகவல் வெளியிடுகையில்,

கொழும்பில் வெடித்த குண்டுகளுக்கு தாம் பொறுப்பு...

வெடிப்புகளுக்கு தாமே காரணம் எனவும் தமிழர் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால் கொழும்பில் மேலும் பல குண்டுகள் வெடிக்கும் என

## ராணுவ தளபதி ஜெரிசில்வா ஜெனரலாக பதவி உயர்வு

(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா ஜெனரல் நிலைக்கு பதவி உயர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவருக்கு அடுத்தபடியில் இருக்கும் மேஜர் ஜெனரல் ஜெகி அல்கம லெப். ஜெனரலாக பதவி உயர்த்தப்படவுள்ளார்.

மேலும் இரு மேஜர் ஜெனரல்கள் லெப். ஜெனரல்களாக பதவி உயர்வு பெறவுள்ளனர். படை நிர்வாக அமைப்பில் தற்போது விஜேதாசார (6 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டை வெடிக்கவைத்தவர் விபரங்கள் அறிவிப்பு

(கொழும்பு)

வட்டாரங்கள் தெரிவித்துள்

## வீரச்சாவு

## வெளிநாட்டு பிரஜைகளை

வெடி மருந்துகளை கொண்டு

(6ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு பிரஜைகளை அவதானம் என எச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பில் பிரபல ஹோட்டல்களில் குண்டு வெடிப்புகள் நடைபெற்றுள்ளதையடுத்து தமது நாட்டு பிரஜைகளை அவதானமாக இருக்கும்படி கூறும் அறிவித்தல்களை கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரகங்கள் அனுப்பி வருகின்றன.

கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகம் ஒன்று தமது நாட்டு பிரஜைகளை கொழும்பின் பெரிய ஹோட்டல்களில் தங்கியிருக்க வேண்டாம் என எச்சரித்துள்ளது. சந்தேகத்திற்கிடமான எது குறித்தும் விழிப்பாக இருக்கும்படி கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரக பிரதித் தூதுவர் ஸ்ரீவன்மன் அறிவித்துள்ளார்.

## நரோமாவில் செல்ல முன்கூட்டியே கட்டணம்

(யாழ்ப்பாணம்)

நரோமா பயணிகள் கப்பலில் பயணம் செய்வோர் யாழ். செயலகத்திலேயே பணம் செலுத்த வேண்டும் என்ற புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

முன்கூட்டியே பயண இருக்கைகளுக்குப் பதிவு செய்வோர் பின்னர் தமது பயணத்தை இடைநிறுத்துவதாலும் வேறு வழியில் பயணம் செய்வதனாலும் பெரும் சிக்கல் எழுந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையை இல்லாதொழிக்க கொழும்பில் சென்று பணம் செலுத்தும் பழைய முறை நீக்கப்பட்டுள்ளது.

நரோமா கப்பலில் பயணம் செய்வோர் முன் கூட்டியே தமது பணத்தைச் செலுத்தி இருக்கையை பதிவு செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

அறவிடப்படும் பணம் எக்காரணம் கொண்டும் மீள வழங்கப்பட மாட்டாது

(6ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு



வீரவேங்கை வாணன்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட விபத்தொன்றில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை வாணன் (அல்றோய் லூவியஸ் மாட்டினஸ் குயின்றன் குளோரியன், தொடர்மாடி குருநகர் யாழ்ப்பாணம்) என்னும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

வெளியிடுகையில்,

கொழும்பில் வெடித்த குண்டுகளுக்கு தாம் பொறுப்பேற்பதாக 'ஈழப்படை' எனும் முன்பு அறியப்படாத ஒரு அமைப்பு அறிவித்துள்ளது. கொழும்பிலுள்ள சர்வதேச செய்தி நிறுவனம் ஒன்றிற்கு வந்த அநாமதேய தொலைபேசி அழைப்பில் இக்குண்டு

சினை தீர்க்கப்படாவிட்டால் கொழும்பில் மேலும் பல குண்டுகள் வெடிக்கும் எனவும் எச்சரிக்கை செய்யப்பட்டது.

ஈழப்படை அமைப்பின் சார்பில் தாம் பேசுவதாக தொலைபேசியில் அநாமதேய குரல் ஒலித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## விபரங்கள் அறிவிப்பு

(கொழும்பு)

கல்கிசை கடற்கரையில் ''ரன்வெலி'' ஹோட்டல் அருகே வெடித்த குண்டு வெடிப்பில் மரணமடைந்தவர் அக்குண்டை கொண்டு சென்ற அல்போன்ஸ் அன்டன் அருள்தாஸ் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குண்டு வெடிப்பில் மரணமடைந்த மேற்படி நபரின் அடையாள அட்டை மூலம் இவர் இல. 432, மாரிசன் கடல் இலவாலை என்ற முக

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு பிரச்சினைக்கு தீர்வாகமாட்டாது

### ராணுவத்தீர்வும் சாத்தியமாகாது; சபாநாயகர் எம். எச். முகமட் தெரிவிப்பு

(கொழும்பு)

'வடக்கையும் கிழக்கையும் இணைப்பதா, இல்லையா என்பது சம்பந்தமாக மக்கள் கருத்தை அறிவதற்கு பொது ஜன வாக்கெடுப்பை நடத்துவது பிரச்சினைக்குத் தீர்வாகும் என்றால் அதை நடத்தலாம் ஆனால் பொது ஜன வாக்கெடுப்பு பிரச்சினைக்கு தீர்வாகாது அப்படி ஒரு வாக்கெடுப்பை நடத்துவதென்றாலும் வடக்கிலும் கிழக்கிலும் நிலைமை அதற்குச் சாதகமாயிருக்க வேண்டும்' வாக்கெடுப்பதானால் ஆயிரக்கணக்கில் இடம்பெயர்ந்தவர்களை மீளவும் அங்கு குடியமர்த்த வேண்டும் இவ்வாறு சபாநாயகர் எம். எச். முகமட் சண்டே ஐலண்ட் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் கூறியுள்ளார்.

மங்கள முனசிங்க தெரிவுக்குழு பல சிபாரிசுகளை முன்வைத்துள்ளது. சிபாரிசுகள் ஏகமனதான முடிவல்ல ஆகவே அந்தச் சிபாரிசுகளின் அடிப்படையில் தீர்வொன்றை எட்ட முடியாது. உலகம் மிக வேகமாக மாறி வருகிறது. 2000 வருடங்களுக்கு முன் நாம் அணுகிய முறையில் இக்குள்ள பிரச்சினைகளை அணுக முடியாது காலத்துக்கு ஏற்ப எம்மை நாம் மாற்றிக் கொள்ள வேண்டும் வழக்கில் இல்லாத பழைய கருத்துக்களால் சிறிதும் பயனில்லை சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என்று பிரித்திருப்பது பிரச்சினைக்குத் தீர்வாகாது ஒரு தேசம் என்று நாம் செயற்பட வேண்டும் இரு தரப்பினரும் ஒரு இணக்கத்தை நாட தயாராக இருக்க வேண்டும்: சம்பந்தப்பட்ட ஒரு தரப்பினருக்கும் பிடிவாதம் இருக்கக் கூடாது அப்போதுதான் ஏற்புடைய ஒரு தீர்வை எட்ட முடியும் இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

தீர்வுத் திட்டத்தை முன் வைத்தால் எமது அரசியல் கட்சிகள் அதில் குற்றம் காண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு குண்டுவெடிப்பு சம்பவம் 43 தமிழர்கள் தொடர்பென கைது

(கொழும்பு)

கொழும்பு குண்டு வெடிப்புகளைத் தொடர்ந்து குண்டுவெடிப்புடன் நேரடியாக தொடர்புடையவர்கள் என குற்றம் சாட்டப்பட்டு 43 தமிழர்களை விசேட பொலிஸ் இராணுவக் குழு கைது செய்துள்ளது. சென்ற வெள்ளி, சனிக்கிழமைகளில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகள் நடந்த இடங்களை சுற்றி வளைத்த மேற்படி பொலிஸ் - இராணுவக்குழுவே இந்த 43 பேரையும் கைது செய்ததாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மீது தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இவர்கள் வழங்கும் தகவல்களைக் கொண்டு மேலும் பலர் கைது செய்யப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கல்கிசை கடற்கரையும் அதனை அண்டிய குடியிருப்புகளையும் சுற்றி வளைத்த சிறிலங்கா பொலிஸ் இராணுவ குழுவினர் அங்கிருந்த பல தமிழர்களைக் கைது செய்துகொண்டு சென்றுள்ளதாகவும் இவர்கள் மீது விசாரணை நடாத்தப்படும் எனவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## விசேட படகுச்சேவை

புதுவருடத்தை முன்னிட்டு இன்று கிளாலி-பூநகரி விசேட படகுச் சேவை வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்

# குண்டுவெடிப்பு சூத்திரதாரிக்கு நெருங்கிய ஐவர் கைது

### பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பு குண்டு வெடிப்புகளின் சூத்திரதாரி என நம்பப்படுபவரும் குண்டு வெடிப்பின்போது மரணம் அடைந்தவருமான நபருடன் நெருக்கமான தொடர்பு கொண்டிருந்த ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மீது தொடர்ந்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி வயனல் குணதிலக தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களில் இருவர் ஆண்கள் என்றும் ஏனைய மூவரும் பெண்கள் எனவும் தெரிவித்த அவர் இவர்கள் தொடர்பாக பூரண விசாரணை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார்.

குண்டு வெடிப்பில் மரணமடைந்தவர் ஓர் சிங்களவரின் வீட்டில் வாடகைக்கு இருந்தார் என்றும் இவர் ஒரு வருட வாடகையை முன்கூட்டியே செலுத்தியிருந்ததாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**கோல்டன் கொமட் குஞ்சு விற்பனை**
கோல்டன் கொமட் பேட்டுக் குஞ்சுகள், கோல்டன் கொமட் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு; ''மல்லிகாபதி'' சந்தைகிழக்கு ஒழுங்கைமானிப்பாய். (8000)

**பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு**
கைகளன் பிறவுண் ஒரு மாதம்வளர்ச்சியடைந்தபேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய். (8001)

**தவறிவிட்டது**
09.04.1994 அன்று யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் இ. கிருஷ்ணமூர்த்தி என்பவரின் அடையாள அட்டையும் த-2 4262 மோட்டார் சைக்கிளின் 93-ம் ஆண்டுச் சான்றிதழுடன் பேஸ் தவறிவிட்டது; தயவு செய்து கண்டெடுப்பவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் கொடுக்கவும்; (7998)

**தவறிவிட்டது**
பாலசுப்பிரமணியம் வேதீஸ்வரன் என்பவருடைய அடையாள அட்டை இலக்கம் 653191606 V 8-4-94 அன்று ஆலங்கேணியில் தவறிவிட்டது; கண்டெடுத்தால் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (8002)

**தேவை**
சகலவிதமான வீடியோ டெக், ரேப் செற் வகைகள், மைக், கமறா மற்றும் எலெக்ரோனிக் பொருட்களை நியாய விலை கொடுத்து வாங்கப்படும். தொடர்புகளுக்கு மின்வளம் இல.8 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (இ-8985)

**துளிர்**
பெப்ரவரிமாத துளிர் வந்துவிட்டது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத் தருகிறோம்; (7995)

**தவறிவிட்டது**
பழைய வடிவமைப்பில் அமைந்த நிலைசயறி கருவியுடன் கூடிய கைக்கடிகாரம் ஒன்று பூநகரி பஸ் தரிப்பில் தவறிவிட்டது; கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாண பதிப்பு அல்லது வன்னிப்பதிப்பு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்ப

**கடும் ஆசிரிய பற்றாக்குறை**
உளச்சார்புப் பரீட்சை- மொழி ஆற்றல், தர்க்க ரீதியான சிந்தனை, கணிதத்திலான திறமைகள், பொது அறிவு- விளையாட்டுத்துறை, சர்வதேச நடவடிக்கைகள், பொருளாதாரம், கல்வி, அரசியல், சமூகபண்பாட்டு பின்னணி - தொடர்பான தகவல்களுக்கு V.A சிவராசா 152B அரசடி றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம் (8003)

**கலைக் குழுக்கள்**
(கொழும்புத்துறை)
வடமராட்சி கலை, பண்பாட்டுக்கழகத்தினரால் கரவெட்டி கிழவி தோட்டம் வளர்மதி சனசமூக நிலையம் போன்ற பகுதிகளில் ஏழுபேர் கொண்ட கிராமியக் கலைக் குழுக்கள் அண்மையில் அமைக்கப்பட்டுள்ளன;
இப்பகுதிகளில் பரவலாக இக்குழுக்கள் ஆரம்பிக்கும் பணிகள் இடம்பெற்று வருகிறது (24)


எதிர்வரும் புத்தாண்டை முன்னிட்டு

புதிய தாரகை பிடவை மாளிகை
வழங்கும்

**மாபெரும் மலிவு விற்பனை**
12-04-94 தொடக்கம் 14-04-94 வரை

ஆடவர்களுக்கான சேட் வகைகள், சாற வகைகளும் (கிப்ஸ் பற்றிக்), மகளிருக்கான றெடிமேட் ஆடைவகைகளும், புதிய ரக துணி வகைகளும், சிறுவர்களுக்கான றெடிமேட் ஆடை வகைகளும் மலிவு விலையில் பெற்றுக் கொள்ள
நாட வேண்டிய இடம்

**புதிய தாரகை பிடவை மாளிகை**
பலாலி வீதி,
திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி.
(8004)


**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**
யாழ் கிளை கோப்பாய்
**ஆண்டுப் பொதுக்கூட்டமும் பிரிவுத் தேர்தலும்**
'இலங்கை செஞ்சிலுவைச்சங்கயாழ்கிளை,கோப்பாய்ப் பிரிவுஆண்டுப்பொதுக்கூட்டமும், பிரிவுத் தேர்தலும்'' என்றதலைப்பில்10 04-94 இப்பத்திரிகையில் வெளியாகியவிளம்பரத்தில் குறிப்பிட்ட'12-03-94'என்பதற்குப் பதிலாக '12-02-94" என திருத்தி வாசிக்கவும்;
நன்றி
செஞ்சிலுவைச் சங்க சேவையில்
73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
கௌரவ செயலாளர் (இ-9110)


**O\L DAY CLASS**
ஒழுக்கமான மாணவர் குழுவுடன் உங்களையும் ஒருவராக இணைத்து சிறந்த பெறுபேறுகளை பெறுவதற்கு

ஏப்ரல் 15 முதல்


# யாழ் பேராலய எல்லைக்குள் குடும்ப கணக்கெடுப்பு

யாழ் பேராலய எல்லைக்குள் வசிக்கும் குடும்பங்கள் பற்றிய கணக்கெடுப்பு இம்மாதம் 13-ம், 14-ம் திகதிகளில் நடாத்தப்பட உள்ளதாக யாழ் பேராலய பங்குத் தந்தை அருட்திரு அன்ரன் இராஜநாயகம் அடிகளார் தெரிவித்துள்ளார்;
முதலில் யாழ் பேராலயத்தில் வாழும் கிறிஸ்தவ குடும்பங்களின் கணக்கெடுப்பு நடாத்தப்படும் எனவும் பின்னர் பிறமதத்தவர்கள்பற்றிய கணக்கெடுப்பு எடுக்கப்படும் எனவும் பொது மக்கள் இந்நாட்களில் வீடுகளில் தங்கியிருந்து இக்கணக்கெடுப்பு வெற்றியளிக்க ஒத்துழைக்குமாறும் அவர்கேட்டுள்ளார் 17

# நரேமா சேவையை தொடர்வதில் நெருக்கடி

(யாழ்ப்பாணம்)
'நரேமா' பயணிகள் கப்பல் சேவையை தொடர்ந்து நடத்துவதற்கான பல நெருக்கடி நிலை தற்போது தோன்றியிருப்பதாகவும், இந் நிலை நீடித்தால் எதிர் காலத்தில் இப் பயணிகள் கப்பல் சேவை நடத்துவது தொடர்பாக முடிவை மீள் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக தெரிய வருகின்றது.
கப்பலில் பயணம் செய்ய தற்காக பலர் முண்டியடித்து கொண்டு பதிவு செய்கின்றனர்;
ஆனால் கப்பலில் பயணம் செய்யும் நாட்களில் இவர்கள்பயணம்செய்யாததனால் கப்பல் பயணத்திற்கு குறிப்பிட்ட தொகை பயணிகள் இல்லாமல் செல்வதால் கப்பலுக்கு செலுத்த வேண்டிய மொத்தபணத்தொகை செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது;

# நோய்க்குக் காரணம் சுகாதார சீரின்மையே

அறிவியல் அரங்கில் உரை

"யாழ் மாவட்டத்தில் அண்மைக் காலமாக நெருப்புக் காய்ச்சல் நோயின் தாக்கம் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தமைக்குக் காரணம் கொழும்பிலிருந்து மருந்து வகைகள் தொடர்ந்து வராமையும் பொதுமக்கள் சரியான முறையில் சுகாதார வாழ்வு வாழாமையுமேயாகும் பெருந் தீங்கை விளைவிக்கின்ற நோயைப் பற்றிய அடிப்படை அறிவைச் சகலரும் பெற்றுக் கொள்ளவேண்டும்; சங்கானை பொது நூலக வாசகர் வட்டத்தினர் 'அறிவியல் அரங்கு' என்னும் நிகழ்ச்சியை ஆரம்பித்து சுகாதாரம் சம்பந்தமான கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்ப முன்வந்தமை பாராட்டுக்குரியது.''
சங்கானை பொது நூலக வாசகர் வட்டத்தினர் நடாத்திய 'அறிவியல் அரங்கு' நிகழ்ச்சியில் கலந்து கொண்டு 'நோய்களும் தடுப்பு முறைகளும்' என்னும் தலைப்பில் கருத்துரை வழங்கிய யாழ் மாவட்ட சுகாதாரக் கல்வி அதிகாரி திரு; கே; வைத்தீஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்;
சங்கானை பொது நூலக வாசகர் வட்டத் தலைவர் சைவப்புலவர் திரு; நா; க; என்றார்;
சுகாதாரக் கல்வி அதிகாரி திரு ஆர்- இராஜேந்திரா அவர்கள் உரை நிகழ்த்தும் போது, ''மக்கள் ஒவ்வொருவரும் தமது வாழ்வில் சுகாதாரம், பொருளாதாரம் ஆகிய இரண்டு ஆதாரங்களிலும் கவனமெடுக்க வேண்டும். இந்த இரண்டு ஆதாரங்களும் ஒவ்வொருவரது வாழ்வுக்கும் இன்றியமையாதவை' என்றார்.
வலி மேற்கு பிரதேசசபை சங்கானை பட்டின உப அலுவலகப் பொறுப்பதிகாரி திரு. பொன் சண்முகானந்தசிவம் அவர்கள் நன்றி தெரிவித்தார்.
பொதுமக்கள், இளைஞர்கள், யுவதிகள் பெருந்தொகையானோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**பயிற்சி வகுப்புகள்**
(கொழும்புத்துறை)
வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் வதிரியில் தமிழ் ஆங்கில மொழிகளில் சுருக்கெழுத்து தட்டச்சுப் பயிற்சி வகுப்புகளை எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கவுள்ளது (24)

நுணுக்குக்காட்டி


**களஞ்சியப் பொறுப்பாளர் தேவை**
யாழ் நகரிலுள்ள வியாபார நிறுவனமொன்றிற்கு களஞ்சியப் பொறுப்பாளர் உடன் தேவை;
முன் அனுபவம் இருத்தல் வேண்டும்
விண்ணப்ப முடிவுத் திகதி:- 19 - 4 - 1994
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
வி. இல; 322, மே/பா ஈழநாதம்
மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.
(8007)


**நினைவில் நீங்காத ஓராண்டு நினைவஞ்சலி**



**நடராசா தர்மகுலேந்திரன்**
[ராதா]
மலர்ந்தது: 11.4.1968 மறைந்தது: 12.4.1993
எங்கு நீர் சென்றாலும் நினைவுகள் மாறாது நாம் இருக்கும் வரை.
உன் பிரிவை நினைத்துருகும்
அன்பின் குடும்பத்தினர்
வாளுவன் சந்தி,
சுழிபுரம்.
(8005)

**நினைவு கூருகின்றோம்...**
1994-04-12

அல்லது வன்னிப்பதிப்பு ஈழ நாதம் காரியாலயத்தில் ஒப்ப டைக்கவும்; (7996)

### அறிவியல் நூல்கள்

பத்துவகையான அறிவியல் நூல்கள் விற்பனையாகிறது. விபரங்களுக்கு வசந்தம், மற் றும் துவிச விற்பனையாளர்க ளிடம் இது ஒரு அறிவியல் இயக்க வெளியீடு (7994)

### வியாபாரிகட்கு

தரமான இமிரேசன் கோ ல்ட் கவரிங் சோடனை நகை கள், லேஸ், நூல் வகைகள், சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளி நாட்டு, உள்நாட்டு அழகு சாதன பொருட்களைநிதான விலைக்கு மொத்தமாக பெற் றுக்கொள்ள ஜெயா அழகு சாதன மாளிகை, 177 A, மின்நிலைய வீதி, யாழ்ப்பா ணம். (இ-9071)

## ஏப்ரல் 15 முதல்

- வாரத்தில் நான்கு நாட்கள் காலை 8.00 — பி. ப. 1.00 வரை
- சனி, ஞாயிறு இலவச விசேட கணித பாட செயலமர்வுகள்
- மாதாந்த பரீட்சைகளுடனும் வினா - விடை வகுப்புகளுடனும் 6 மாத துரித மீட்டல் வகுப்பு

**21 வருட கால பெறுபேறுகள் நிகழ்காலத்திற்கு சான்றாகும்**

ESTD:- 1973 REGD:- No J/7999

**The Express Institute**

IRUPALAI - KOPAY

(இ:9099)

வாசகர் வட்டத் தலைவர் சைவப்புலவர் திரு. நா. க. தங்கரத்தினம் அதிபர் அவர் கள் தலைமையில் நூலகமண் டபத்தில் இவ் அறிவியல் அர ங்கு நிகழ்ச்சி நடைபெற்றது

சுகாதாரக் கல்வி அதிகாரி திரு. வைத்தீஸ்வரன் தொட ர்ந்து உரையாற்றும்போது, " சங்கானைப் பகுதியிலேயே வயிற்றோட்டத்தால் இறந் தோர் தொகை அதிகமாகக் காணப்படுகிறது. சங்கானை வாழ் பொதுமக்கள் சுகாதா ரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்பதோடு இடம் பெயர்ந்து வந்திருக்கும் மக் களது சுகாதாரத்தையும் கவ னித்துக் கொள்ள வேண்டும்"

ஆரம்பிக்கவுள்ளது (24)

### நுணுக்குக்காட்டி திருத்துதல்

யாழ். மாவட்டக் கல்வி வலயம் II இல் உள்ள பாட சாலைகளிற்கான பழுதடை ந்த நுணுக்குக்காட்டிகள் யாழ். மாவட்ட கணித, விஞ் ஞான மூலவள நிலையத்தில் திருத்திக் கொடுக்கப்படுகின் றன. மேலும் திருத்த வேண் டிய நுணுக்குக்காட்டிகளைக் கொண்ட பாடசாலைகள் மேற்படி நிலையத்திலின்று தொடர்பு கொள்ளுமாறு உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ. ஜேதநாயகம் கேட்டுள்ளார்.

## சுகுணாஸின் அறிவித்தல்:-

சுகுணாஸ் புடவை மாளிகையில் 31 01-1994 அன்று 6 கிறாம் (முக்கால் பவுண்) நிறையுள்ள தங்க நகை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி சுகுணாஸ் புடவை மாளிகையில் பெற்றுக் கொள்ளவும்.

❋ எம்மிடம்

**நவநாகரிகத்திற்கேற்ற புதிய சாறி வகைகள்**

❋ காயத்திரி சாறிஸ் ❋ மகாநதி சாறிஸ்
❋ ராஜகுமாரன் சாறிஸ் ❋ பாடகன் சாறிஸ்

மற்றும்

**முகூர்த்தப் பட்டுப் பிடவைகளுக்கு புகழ் பெற்ற புதியதோர் ஸ்தாபனம்**

| சுகுணாஸ் | கிருஷிகா |
|---|---|
| புடவை மாளிகை | ஆடை அகம் |
| 29, நவீன சந்தை (உட்புறம்) | 69A, நவீன சந்தை (உட்புறம்) |
| யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம். |

(இ-9112)

## 3-ம் ஆண்டுநினைவுச் சுடர்

தோற்றம்: 2. 4. 1939



மறைவு: 12. 4. 1991

### துரைராசா கோணேஸ்வரி

அகல்விளக்காய் எம் குடும்பத்தில் வந்த குடும்ப விளக்கே நீங்கள் அணைந்தது விதியா அல்லது இறை வன் விளையாட்டு இதுவா உங்களோடு வாழ்ந்தது சில வருடங்கள் ஆனாலும் கண்ணோடு கலந்து நின்று கனவாகி போனாயே உன் இழப்பின் கொடுமையை எழுதிடவோ எழுத்தில்லை உன்வதனம் அழகிய புன் னகை அழியாது எம் மனதில் நிழலாடும் என்றும் இத யத்தில் இருந்து பூத்தூவி பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி, சாந்தி, சாந்தி

கணவன், பிள்ளைகள்

93, சிவன்பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். (இ-9092)
12-4-94

1994-04-12

1984ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்ப்பாணத் தில் சிறிலங்காப்படையினரால் படுகொலை செய்யப் பட்ட 07 தமிழர்கள்,

1988ஆம் ஆண்டு இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கோபு-தேவின்** (க. தர்மராசா - நாவற்குழி- மட்டு)

1989ஆம் ஆண்டு கரந்தனில் இந்தியப்படை யினர் பதுங்கியிருந்து தாக்கியபோது வீரச்சா வெய்திய-

**கண்ணன்-ஜெமினி** (சுப்பிரமணியம் திருநாவுக் கரசு- எஸ். ஜே. வி. செல்வநாயகம் வீதி, கோண்டாவில் கிழக்கு - யாழ்)

யாழ் - சாவகச்சேரியில் இந்தியப்படையினர் பதுங்கியி ருந்து தாக்கிய போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**லெப். ஜெனா** (சந்திரகுலசிங்கம் சிவராசா- வரணி வடக்கு, கொடிகாமம்-யாழ்)

வவுனியா - பூம்புகார் பகுதியில் இந்தியப்படையி னரின் வாகனத்தொடரை வழிமறித்து மேற்கொள் ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய-

**கப்டன் சண்முகம்** (முத்துக்குமாரு சண்முகராசா - கண்டிறோட், அரியாலை- யாழ்)

**2-ம் லெப். சின்னசுதா-அகிலன்** (கதிர்காம நாதன் சுதாகரன் - கொழும்புத்துறை- யாழ்)

இந்தியப்படை மற்றும் தேசவிரோத சக்திகளி னால் சுட்டுக்கொல்லப்பட்ட எமது தீவிர ஆதரவாள ரான,

**சபாபதிப்பிள்ளை கவிச்சந்திரன்** (அரியாலை - யாழ்)

மீசாலையில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட ஆதரவாளரும் மீசாலை விக்னேஸ் வரா மகாவித்தியாலய அதிபருமான,

**கந்தையா செல்லத்துரை** (சரசாலை - சாவகச்சேரி)

1991ஆம் ஆண்டு யாழ் - காரைநகர்ப் பகுதியில் சிறிலங்காப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச் சாவெய்திய-

**லெப். உத்தமா** (தங்கவடிவேல் சந்திரகுமார்- உதயசூரியன் புதுவீதி, மதவடி-வல்வெட்டித்துறை)

**சிவம்-சிவா** (முத்தையா சாந்தகுமார் - வதிரா யன் வடக்கு, கரணவாய்-யாழ்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(இ-9090)

பெருவாழ்வு பெற்று செழிப்புடனே இனிது
வாழ எம் இதயங்கனிந்த

# புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# லலிதா பட்டுச்சோலை

உங்களை அழைக்கிறது

தங்களின்

திருமண வைபவங்களுக்கேற்ற

★ கூறைத்தினிசுகள் ★

★ காஞ்சிபுரம் ★ பெனாரஸ் ★ மைசூர் சில்க்ஸ்

★ பட்டுவேட்டிகள் மற்றும் பலவகை சாறிகளுக்கும், வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சூட்டிங், சேட்டிங்

கண்ணைக்கவரும் றெடிமேட் ஸ்கேட் பிளவுஸ்

முதலானவற்றிற்கு

இன்றே நாடுங்கள்:

யாழ் நகரின் முன்னணி நிறுவனம்

# லலிதா பட்டுச்சோலை

5-6 நவீன சந்தை யாழ்ப்பாணம்.

(இ-9096)


## சூழல் விவசாய பயிற்சிகள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் விவசாயம், சூழல் பாதுகாப்பு தொடர்பான ஒருவாரகாலப் பயிற்சி நெறி ஒன்று கிளிநொச்சிக் கோட்டத்தில் விரைவில் நடைபெற உள்ளது.

விவசாயம் தொடர்பான நடைமுறைப் பிரச்சினைகள் அவற்றுக்கான தீர்வுகள் பயன்படுத்தக்கூடிய பொருத்தமான நவீன தொழில்நுட்ப முறைகள், மற்றும் சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவம் ஆகியவை தொடர்பான விளக்கங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளன.

ஆர்வமுள்ள விவசாயிகள் தத்தமது வட்டத்தொடர்பாளருடன் தொடர்பு கொண்டு இப்பயிற்சி நெறிகளில் பங்குபற்றிப் பயன்பெறுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பு ஒன்றின் மூலம் கேட்டுள்ளது.

## தேனி வளர்ப்பு ஊக்குவிக்கப்படும்

தேனீவளர்ப்பை ஊக்குவிப்பதற்காக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தேனீப் பெட்டிகளை விநியோகித்தும் இலவச தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கியும் பயிற்சி வகுப்புக்களை நடாத்தியும் வெளிநாட்டு நிதியூட்டத்துடன்பல தேனீவளர்ப்புத்திட்டங்களை முன்னெடுத்தும் வருகின்றது.

எமது பிரதேசத்திற்கேற்ற தேனீப்பெட்டிகள் இந் நிறுவனத்தால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதே வேளை ஒருதொகுதி தேனீப்பெட்டிகள் ஆர்வமுடையவர்களுக்கு விநியோகிப்பதற்காக கொழும்பில் இருந்தும் கொண்டுவரப்பட்டுள்ளது.

தற்போது திருநெல்வேலி விவசாய பயிற்சி நிலையத்தில் பயிலும்பயிற்சியாளருக்கு தேனீவளர்ப்பு தொடர்பான செயல் முறை பயிற்சிகள் தொடராக வழங்கப்பட்டு வருகின்றது.

ஆர்வமுடையவர்கள், மேலதிகவிபரங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன செயலகங்களில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

## முதல் காலாண்டுப் பகுதியில் 400 நோயாளர் உயிரிழப்பு

இந்த ஆண்டின் முதற் காலாண்டுப் பகுதியில் மட்டும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பலவித நோய்களாலும் சுமார்நானூறுபேர் வரையில் உயிரிழந்துள்ளனர் இவ்வாறுஉயிரிழந்தவர்களில் அதிகமானோர் செப்டிசீமியாவினால் பாதிக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஜனவரியில் 23 பேரும், பெப்ரவரியில் 24 பேரும், மார்ச்சில் 80 பேரும் செப்டிசீமியாவினால் உயிரிழந்துள்ளனர். ஏனைய நோய்களால் 132 பேர் ஜனவரி மாதத்திலும், 116 பேர் பெப்ரவரி மாதத்திலும், 94பேர் மார்ச் மாதத்திலும் உயிரிழந்துள்ளனர்.

## இன்றைய நிகழ்வுகள்

சிவயோக சுவாமிகளின் குருவாகிய நல்லூர் செல்லப்பா சுவாமிகளை குருபூசை வழிபாடு யாழ் இந்து மகாசன சந்தியிலுள்ள செய்ண்ட தேவர் ஆதீனத்தில் இன்று காலை ஒன்பது மணிமுதல் நடைபெறவுள்ளது

ஃ ஃ ஃ

யாழ் ஸ்கந்தவரோதயா கல்லூரியிலிருந்து தெல்லிப்பழை தொழில்நுட்பக் கல்லூரி நிலையத்தில்1991/93 கல்வியாண்டுக்கென பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் இன்று காலை நிலையத்தில் சந்திக்கும்படி சிரேஷ்ட போதனாசிரியர் கோரியுள்ளார்.

## சிறு ஒழுங்கைகளை இருத்த மாநகரசபை நடவடிக்கை

### 4 மில். ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் சிறுஒழுங்கைகள் உட்பட 45 வீதிகளை திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது: இதற்கென 4 மில்லியன் ரூபா பணம் ஒதுக்கப்பட்டுள்ளது:

யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட இவ்வீதிகள் சீரழிந்து போயிருப்பதை அடுத்தே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

விரைவில் யாழ்ப்பாணம் எடுத்து வரப்படவிருக்கும் 800 பீப்பா தாரில் 309 பீப்பாக்களை மாநகர சபை தன் தேவைக்கு எடுக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் 4 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டு குறிப்பிடப்படும்45 வீதிகளையும் முற்றாக செப்பனிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. (பி, இ)

## பிறப்புச் சான்றிதழ் எழுதும் பத்திரங்களுக்குத் தட்டுப்பாடு

யாழ். செயலக மாவட்ட பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர் பணிமனையில் கடந்த 01-08-1954ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்தவர்களுக்கான பிறப்புச்சான்றிதழ் விண்ணப்பங்கள் மறு அறிவித்தல் வரை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது எனப் பணிமனை வாசலில் எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது

பிறப்புச்சான்றிதழ்கள் எழுதும் பத்திரங்கள் முடிவடைந்துள்ளதாலேயே இத்தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எழுதும் இப்படிவங்கள் கொழும்புத்தலைமைச் செயலகத்தில் இருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டதும் இதற்கான விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்வது பற்றி அறிவிக்கப்படும் என்று யாழ் செயலக மாவட்ட மேலதிகப் பதிவாளர் திரு. அ. பொன்னம்பலம் அறிவித்துள்ளார். (24)


# மதுரமான இரவு

# மதுரமான இரவு

மகத்தான புடைவைத் தெரிவுகளை மலிவான விலையில் யாழ் வாழ் மக்களுக்கு
வழங்கி வசதி செய்யும் "மதுரா பட்டு மகால்" ஸ்தாபனத்தாரின்

## கலை நிகழ்வுகள்

- நாதஸ்வர தவில் மேதைகளின் நாதஸ்வர தவில் கச்சேரி
- நகைச்சுவை கதம்ப நிகழ்ச்சி
- கலை பண்பாட்டுக் கழகத்தினரின் "சந்தனக்காடு" நாடகம்
- தமிழீழத்தில் பிரபல்யமான இசைக்குழுவினரான இராஜன் இசைக்குழுவினரின் இன்னிசை விருந்து

## பரிசுக் குலுக்கல்

இடம்: இளங்கலைஞர் மன்றம் காலம்: 20-04-1994 மாலை

பிரவேசம்: இலவசம்

**குறிப்பு:** மதுரா பட்டுமகாலில் 13 04-1994 வரை புடைவை வாங்கும் சிட்டை இலக்கங்கள் யாவும் 20 04-1994 பரிசுக் குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதால் புத்தாண்டுக்கான உங்கள் புடைவைத் தெரிவுகளை மதுரா பட்டு மகாலில் தெரிவாக்குவதன் மூலம் மேலும் சிட்டை (Bill) களை சேகரித்து அதிர்ஷ்டசாலியாகும் சந்தர்ப்பத்தை அதிகரித்துக் கொள்ளுங்கள்.

1ஆம் பரிசு தங்கப்பதக்கம் 2ஆம் பரிசு 5000.00

3ஆம் பரிசு 2500.00 பல ஆறுதல் பரிசுகள்

ஓராண்டு காலமாய் ஒய்யார நடை போடும் மதுரா பட்டு மகாலின் மகிமை மேலும் மலர வாழ்த்துகின்றோம்

| | | |
|---|---|---|
| முகூர்த்தப் பட்டுப்புடவைகளை உங்கள் விருப்பத்திற்கு தெரிவு செய்ய ஓரே ஸ்தாபனம்<br>சுகுணாஸ் ரெக்ஸ்<br>89, நவீனசந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம் | உங்களது நயம், நம்பிக்கை நாணயமுள்ள தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்<br>ராதிகா நகை மாடம்<br>தங்கப்பவுண் நகை வியாபாரம்<br>222, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | தரம் நாடுவோர் தவறாமல் நாடும் இடம் உங்களது நயம் நம்பிக்கை நாணயமுள்ள தங்க வைர நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம்<br>புதிய லதா நகைமாடம்<br>தங்கப்பவுண் நகை வியாபாரம்<br>176, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி9094) |

## சுகாதார வாரம்

(வடமராட்சி)

பருத்தித்துறை நகரசபை பிரிவுக்குட்பட்ட சனசமூக நிலையங்கள் தோறும் வாய்ச் சுகாதார வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இம்மாதம் 7-ம் திகதி முதல் இச்சுகாதார வாரத்தில் வாய்ச்சுகாதாரம் பற்றிய கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

இச்சுகாதார வாரத்தில் நகரசபை விசேட ஆணையாளர் திரு. க. சண்முகநாதன் தலைமையில் பாலர் பாடசாலைகளிலும், சனசமூக நிலையங்களிலும் சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் அனுசரணையுடன் கருத்தரங்குகள் நடைபெற்று வருகிறது.

(யோ)

## வீட்டுத்தோட்ட முயற்சி அபிவிருத்தி வேண்டும்

### உதவி விவசாயப் பணிப்பாளர்

(பருத்தித்துறை)

"கிராமிய மட்டத்தில் வீட்டுத்தோட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மேம்பாடடையும் போது மக்கள் பல்வேறு வகையான நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். இதன் அடிப்படையிலேயே கிராம மட்டத்திலான வீட்டுத்தோட்டப் போட்டிகள் நடாத்தப்பட்டு வீட்டுத்தோட்ட அபிவிருத்திகள் ஊக்குவிக்கப்பட்டு பரிசளிப்பு விழா நடாத்தப்படுகின்றது. இவ்வீட்டுத்தோட்ட முயற்சிகள் மேலும் அபிவிருத்திசெய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவேண்டும்.

மேற்கண்டவாறு வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் விவசாயத்திணைக்களத்தால் நடாத்தப்பட்ட கிராமமட்டத்திலான வீட்டுத் தோட்டப்போட்டி பரிசளிப்பு விழாவிலே பிரதமவிருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் மாவட்ட உதவிவிவசாயப்பணிப்பாளர் திரு. த. இவலோகநாதன் குறிப்பிட்டார். பொலிகண்டி பாலாவிவித்தியாலயத்தில் நடைபெற்ற இப்பரிசளிப்பு விழாவிற்கு வடமராட்சி விவசாயப்போதனாசிரியர் திரு. இ. பசுபதி தலைமை தாங்கினார். தொடர்ந்து உரையாற்றிய உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. சிவலோகநாதன் குறிப்பிட்டதாவது:

ஒவ்வொரு குடும்பமும் வீட்டுத்தோட்ட முயற்சியில் ஈடுபடவேண்டும். வீட்டுத்தோட்டங்கள் மூலம் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதுடன் குடும்பவருமானத்தையும் பெருக்க முடியும் இன்று பரிசளிப்பு விழா நடைபெறும் வீட்டுத்தோட்ட நடவடிக்கைகளில் மழை காலங்களில் பயிரிடப்பட்ட இருமிரா சினிகள் பாவிக்கப்படாத இயற்கைப் பசளைகள் ஊட்டப்பட்ட அதிசிறந்த உற்பத்திகளையே இவ்வீட்டுத்தோட்ட உற்பத்தியாளர்கள் பெற்றிருக்கின்றார்கள் என்பது மிக மகிழ்ச்சிக்குரியதாகும். இப்பகுதிகளின் வீட்டுத்தோட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளில் விவசாயப்போதனாசிரியர் திரு பசுபதி மேற்கொண்டுள்ள முயற்சிகள் பாராட்டப்படவேண்டியவை. வருங்காலங்களில் இக்கிராமப்பகுதிகளில் உள்ள ஒவ்வொரு வீடுகளிலும் வீட்டுத்தோட்டங்கள் உற்பத்திசெய்யப்படுமென நம்புகிறேன்.

இக்கிராமிய வீட்டுத்தோட்டப் போட்டியின் முதலாவது பரிசை அல்வாயைச் சேர்ந்த திரு க. செல்லத்துரையும் இரண்டாவது பரிசை திருமதி க. நேசம்மாவும் பெற்றனர். 20 வீட்டுத்தோட்டப் போட்டியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. விவசாயிகளுக்கு இலவச விதைகள், நாற்றுக்களும் வழங்கப்பட்டன.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமி, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழக வடமராட்சிப் பொறுப்பாளர் திரு. பூங்குன்றன், கூட்டுறவுகள் பொருண்மிய மேம்பாட்டுக் கழக மாவட்டப் பொறுப்பாளர் திரு. சங்கிலியன், மாவட்டச் செயலாளர் திரு வீரநல்லிதன் ...

## பிறந்த நாள் நினைவலைகள்



### 2-ம் லெப். மாதங்கி

(கார்லீன் நிரோஜினி தேவசகாயம்)

| தாயின் மடியில் அரும்பாய் | தாயகமண்ணில் வித்தாய் |
|---|---|
| 12-4-1970 | 11-11-1993 |

தமிழீழத் தாய் உவந்த தவப்புதல்வி
தாயகதாகத்தின் தாலையில் தவழ்ந்தாய்
பொங்கிப் பாயும் புலியானாய்
போகும் பாதையில் புயலானாய்

முத்தாகி நீயெமக்கு சொத்தாகி வந்துதித்தாய்
மூவெண் அகவையை முற்றாக முடிக்கு முன்னே
எமையெல்லாம் நீயிங்கே தவிக்கவிட்டு
ஏகினாயோ புதியதோர் விடியலுக்காய்.

வித்தாகிப் போனாயோ எங்கள் நிரோ
வீறுகொண்டு எழுந்திட்டார் தமிழரெலாம்
...

## வைத்தியச் சான்றிதழுக்கு கட்டணம் அதிகரிப்பு

(தொல்புரம்)

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் வழங்கப்படும் வைத்திய அத்தாட்சிப்பத்திரங்களுக்கு அறவிடப்படும் கட்டணத்தை பத்து ரூபாவினால் அதிகரித்திருப்பதாக சுகாதார திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பிலுள்ள சுகாதார சேவைப்பணிப்பாளர்நாயகம் அண்மையில் இது தொடர்பாக வெளியிட்டுள்ள சுற்றுநிருபத்தில் மேற்படி கட்டணங்கள் மார்ச் மாதம் தொடக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் அரசாங்க வைத்தியசாலைகளில் அரச ஊழியர் தவிர்ந்த ஏனைய தனிப்பட்டவர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வந்த வைத்திய அத்தாட்சிப் பத்திரத்திற்கு இதுவரை அறவிடப்பட்டு வந்த 20ரூபாவை தற்போது 30 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளன. புதிய கட்டணமாக மேற்கூறிய 30 ரூபாவினை செலுத்தியே தனிப்பட்ட வைத்திய அத்தாட்சிப்பத்திரம் பெறமுடியும் எனவும், மேலும் தனிப்பட்ட வைத்திய பரீட்சைக்கான கட்டணம் 200 ரூபா எனவும் அந்த சுற்றறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (41)

## விலை வித்தியாசங்கள் பற்றி பொதுமக்கள் முறையீடு

(யாழ்ப்பாணம்)

யாழ் கச்சேரி புனர்வாழ்வுப் பகுதியினரால் இடம்பெயர்ந்தவர்களிற்கு வழங்கப்படும் இலவச உலர்உணவு விநியோகத்தில் பங்குனிமாதத்திற்கான பொருள்களில் அடங்கியுள்ள மைசூர் பருப்பின் விலை ஒரு கிலோ கிராம் விலை 48 ரூபா. அதேவேளை யாழ் கச்சேரி புனர்வாழ்வுப் பகுதியில் இருந்து பொருள்களைப்பெற்று விநியோகிக்கும் விற்பனைத் திணைக்களத்தின் கிளைகளில் ஒரு கிலோ கிராம் மைசூர் பருப்பு 44 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

இதன் வித்தியாசம் பற்றி ப.நோ.கூ. சங்க அதிகாரியிடம் கேட்டபோது தமக்கு யாழ் கச்சேரி இடம்பெயர்ந்தவர்களிற்கான உலர் உணவு விநியோகத்திற்காக வழங்கியுள்ள மைசூர்பருப்புமொத்த விலையாக 46 ரூபாவாக தருவதாகவும், அதனால் இலவச உ.உ.விநியோக மைசூர் பருப்பு சில்லறை விலையாக 48 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் இப்படியான விலை வித்தியாசங்கள் பற்றி புனர்வாழ்வுப் பகுதியினரிடம் தான் கேட்க இருப்பதாகவும் கூறினார். (88)

## எறிகணை வீச்சு

(தொல்புரம்)

காரைநகர் காவல் நிலைகளிலுள்ள சிறிலங்கா ஆயுதப்படையினர் தமது காவலரண்களிலிருந்து 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 9.40 மணியளவில் பொன்னாலை, மூளாய் பகுதிகளை நோக்கி எறிகணை வீச்சினை மேற்கொண்டனர். அன்றையதினம்இரவுவேளை மேற்படி பகுதிகளின் மேல் வெளிச்சம்பாய்ச்சிய இராணுவத்தினர், பின்னர் எறிகணைத்தாக்குதலை மேற்கொண்டனர் எனவும் இந்த எறிகணைகள் பொன்னாலை மக்கள் குடியிருப்புக்களை அண்மித்த பகுதிகளிலும், மூளாய் வயல் வெளிகளிலும் வீழ்ந்து வெடித்ததாகவும் தெரியவருகின்றது. (41)

## அடையாள அட்டைகள் வந்துள்ளன

(தொல்புரம்)

யாழ். ஆட்பதிவுத் திணைக்கள அலுவலகத்திற்கு கொழும்பிலிருந்து அடையாள அட்டைகள் வந்து சேர்ந்துள்ளன.

இவற்றில் 1200 சாதாரண தேசிய அடையாள அட்டைகளும்; தொலைந்த அடையாள அட்டைகளுக்குபதிலாக விண்ணப்பித்த விண்ணப்பதாரர்களுக்கு 700 அடையாள அட்டைகளும், பாடசாலை மூலம் விண்ணப்பம் செய்தவர்களுக்கு 300 அடையாள அட்டைகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

பாடசாலை மூலம் விண்ணப்பித்த அடையாள அட்டை தவிர்ந்த ஏனைய அட்டைகள் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதெனவும் இதே வேளைபாடசாலைகள் மூலம் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த பாடசாலைகள் யாழ் ஆட்பதிவுத் திணைக்களத்தில் இவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது (41)

## மாணவர் ஒழுங்காக வர பெற்றோர் ஊக்க வேண்டும்

### - பிரதேச செயலர் தெரிவிப்பு

(வடமராட்சி)

மாணவர்கள் கல்லூரிக்கு ஒழுங்காக வருகின்றபோது தான் கல்வியில் மட்டுமல்ல விளையாட்டுக்களிலும் அவர்கள் நல்ல பயிற்சியைப் பெற முடியும்.

இவ்வாறு அம்பன் அ.த.க. பாடசாலையில் அதிபர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் நடைபெற்ற இல்லவிளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலர் திரு. க. சங்கரப்பிள்ளை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்; மாணவர்களின் ஒழுக்கங்கள் ஆசிரியர்களில் மட்டும் தங்கியிருக்கவில்லை பெற்றோர்களிலும் தங்கியிருக்கிறது பாடசாலைக்கு மாணவர்கள் ஒழுங்காக வரவேண்டும். பெற்றோர் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்பி வைக்க வேண்டும் அப்போதுதான் மாணவர்கள் கல்வியிலும், விளையாட்டுக்களிலும் நல்ல ... போதும் மாணவர்கள் ஒழுங்காக வந்து பயிற்சியைப் பெற்றுக் கொள்ளவில்லை.

இதேபோன்று கல்வியிலும் ஒவ்வொரு மாணவர்களும் நல்ல பயிற்சி பெறாது விட்டால் அவர்களது எதிர்காலம் சூனியமாகி விடும். இதனை ஒவ்வொரு பெற்றோரும் கருத்திற் கொண்டு தமது பிள்ளைகளை அநாவசியமாகப் பாடசாலைகளிலிருந்து நிறுத்தக் கூடாது. பெற்றோர் விடுகின்ற ஒவ்வொரு தவறுகளும் பிள்ளைகளைக் கண்டிக்கும். ஒவ்வொரு பெற்றோருக்கு ஒவ்வொரு பிரச்சினைகள் இருக்கத்தான் செய்யும். என்றாலும் மாணவர்களது எதிர்காலத்தை வீணடிக்கச் செய்யக் கூடாது என்றார்.

வெற்றி பெற்ற வீரர்களுக்கு பிரதம விருந்தினர் பரிசில்களை வழங்கினார்.

(யோ)

## தொழில் முனைவோருக்கு ஊக்கமளிக்க வேண்டும்

### பேராசிரியர் துரைராசா

"இன்றைய சூழ்நிலையில் கைத்தொழில் மேம்பாட்டுக்கும் தொழில் முனைவோருக்கு ஊக்கமளிப்பதிலும் தொழில்துறை மேம்பாட்டு நிறுவனம் ஆற்றும் சேவையைப் பாராட்டி இந்நிறுவனத்தின்செயற்பாடுகள் மேன்மேலும் வளர்வதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டுமென கடந்த மாதம் 24-ம் திகதி தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தில் தனக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார நிகழ்வின் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் பதிலுரை வழங்குகையில் குறிப்பிட்டார்.

இப்பிரிவுபசார வைபவத்தினை தொழிற்துறை மேம்பாட்டு நிறுவனத்தினரும் தொழிலதிபர்களும் ஏற்பாடு செய்திருந்தனர். இந்நிகழ்வில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், அறிஞர்கள் மற்றும் தொழிற்துறை வல்லுனர்கள் போன்ற அனைத்து தரப்பினரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## கோட்டை பகுதிக்கு பிரதமர்ரணில்நேரடிவிஜயம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக்காலை கொழும்பு புறக்கோட்டைப் பகுதியையும் சுற்றியுள்ள இடங்களையும் நேரடியாக சுற்றிப் பார்வையிட்டார். கோட்டைப்பகுதியில் புத்தாண்டை முன்னிட்டுபொருட்கள்வாங்க வந்த பலரிடமும் அவர்களது குறைபாடுகள் தொடர்பாக கேட்டறிந்து கொண்டார். வர்த்தகர் எதிர்நோக்கும் பிரச்சினைபற்றியும் விசாரித்தார்.

போதிராஜா மாவத்தையில் தமது பயணத்தை ஆரம்பித்த அவர் உலக சந்தைப் பகுதிக்கும் சென்று பார்வையிட்டார்.

பிரதமரின் இந்த நடவடிக்கை பற்றி கருத்து தெரிவித்த வர்த்தகர்கள் பிரதமர் ஒருவர் இவ்வாறு பண்டிகை காலத்தின்போது நேரடி விஜயம் செய்வது இதுவே முதல் தடவை எனத் தெரிவித்துள்ளனர்.

புது வருடத்தில் தனது 9ஆம்

வீறுகொண்டு எழுந்திட்டார் தமிழீழமெலாம்
கதையாகி கற்பனையாய் போகவில்லை
காவியமாய் மாறிஇனி சரித்திரத்தில் இடம்
பிடிப்பாய்.

நீ பிறந்த போதே பெரிதுவந்தோம்
உனையிழந்த போதோ உன்வீரம் கண்டோம்
நீ பிறந்த இந்நாளில் எம்மிடையே நீயில்லை
உனை நாங்கள் நினைக்கின்றோம் கண்ணீரில்
கலக்கின்றோம்.

இவரது பிறந்தநாளில் இவர் நினைவால் வாடும்
பெற்றோர், சகோதரர்கள், மாமாமார்,
சித்திமார், பேரன், பேர்த்திமார்,
உறவினர், நண்பர்கள்.

இல. 26/2, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(இ-9093)

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
07.07.1968

தமிழீழ மண்ணில்
12.04.1989

## லெப்டினன்ட் ஜெனா
(சத்துரகுலசிங்கம் சிவராசா)

ஆண்டுகள் ஐந்தல்ல பல்லாண்டுகள் போனாலும்
நீங்காத உன் நினைவலைகள் எங்கள்
நெஞ்சங்களிலிருந்து...

உன் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை
வேண்டி நிற்கும்

வரணி வடக்கு,
வரணி.

(7983)

குடும்பத்தினர்,
நண்பர்கள்.

டச் செயலாளர் திரு வீரசிங்கம் உட்பட இன்னும்பலர் உரையாற்றினர். அடுத்தவருடம் இப்பகுதிகளில் உள்ள 25 கிராமங்களில் 1,000பைக் கற் விதைகள் விநியோகிக்கப்பட்டு இக்கிராம மட்டத்திலான வீட்டுத்தோட்ட முறையின் மேம்படுத்தப்படுமென விவசாயப் போதனாசிரியர் திரு. பசுபதி தெரிவித்தார்.

(25)

மாணவர்கள் கல்வியிலும், விளையாட்டுக்களிலும் நல்ல பயிற்சியைப் பெற்று தேர்ச்சியுள்ளவர்களாக வர முடியும்.

இங்கு நடந்த விளையாட்டுக்களைப் பார்க்கும்போது விளையாட்டு வீரர்கள் சிலர் அதிக பயிற்சியைப் பெற்றிருக்கவில்லையென்பதை காணமுடிகிறது பாடசாலையில் விளையாட்டு ஆசிரியர்களால் பயிற்சி கொடுக்கப்பட்ட

# சமூக மேம்பாட்டிற்கு புறநிலைப்படிப்பு உதவுகிறது

**-கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன்**

(நல்லூர்)

ஒரு சிலருக்கான பல்கலைக்கழகம் என்ற நிலைமையை மாற்றி இனத்தின் பெரும்பான்மை-சமூக மேம்பாட்டிற்காக பல்கலைக்கழகம் இயங்க வேண்டுமென்ற சிறந்த கொள்கையை முதன்மைப் படுத்தியாழ். பல்கலைக் கழகம் புறநிலைப்படிப்புகள் அலகு பணியாற்றுவதைப் பாராட்டுகிறோம். இவ்வாறு தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் திரு இளங்குமரன் தெரிவித்தார்.

யாழ் பல்கலைக்கழக புவியியற் துறை மண்டபத்தில் நடந்த மீன்பிடியியல் -ஓர் அடிப்படை கற்கை நெறி ஆரம்ப விழாவில் சிறப்புரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு கூறினார். புறநிலைப்படிப்புகள் அலகு இணைப்பாளர் திரு. இராசிவச்சந்திரன் விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

தொடர்ந்து பேசிய அவர், மக்களுக்கு தேவையான எமது மனித வளத்தை மேம்படுத்துவதற்குரிய வகையில் கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தி வரும் யாழ் பல்கலைக் கழகம் புறநிலைப் படிப்புகள் அலகின் பணி மக்களுக்கும், மண்ணுக்கும் ஆற்றுகின்ற சிறப்பான பணியாகும். மக்களையும் பல்கலைக் கழகத்தையும் இது இணைக்கிறது. இப்பணி தொடரவேண்டும்-பல்கலைக் கழகம் பல விதமான கற்கை நெறிகளையும் கற்பிக்கும் இடமாக மாற வேண்டும் பல்வேறு துறை சார் உற்பத்தித் திறனை உருவாக்கும் வகையில் பல்வேறு கற்கை நெறிகளையும் யாழ் பல்கலைக் கழகம் கற்பிக்க வேண்டும் என்றார்.

## சீவல் தொழிலாளி விபத்தில் மரணம்


(தொண்டமானாறு புரம்)

சங்கானை இடம்பெயர்ந்தோர் முகாம் ஒன்றில் வதியும் சீவல் தொழிலாளி ஒருவர் கள் இறக்கும் பொருட்டு பனை மரத்தில் ஏறியபோது தவறி வீழ்ந்து மரணமானார்.

இச்சம்பவத்தில் கதிரன் பசுபதி (வயது 64) என்ற சீவல் தொழிலாளியே பனையால் வீழ்ந்து பரிதாபமாக மரணத்தைத் தழுவிக் கொண்டவராவார். இவரது மரணத்தினையிட்டு மரண விசாரணை நடைபெற்று விபத்து மரணம் என தீர்ப்பு வழங்கப்பட்டது என தெரியவருகின்றது.

(41)


புது வருடத்தில் தனது 9 ஆம்
அகவையில் காலடி வைக்கும்



**UNIKCO**
*COMPUTER CENTRE*

எதிர்வரும் 15 ஆம், 16 ஆம் திகதிகளில் ஆரம்பிக்கும்
வகுப்புகளுக்கு மட்டும் கட்டணங்களில் சலுகை தருகிறது

- BASIC Language (Including ADVANCED BASIC)
- PASCAL Language

வழமையான கட்டணம் 1,750/-
சலுகைக் கட்டணம் 1000/-

- dBASE III PLUS and MS-DOS
- LOTUS 1-2-3 and MS-DOS
- WORD PROCESSING (Wordstar Professional Rel 5.5) & MS-DOS

வழமையான கட்டணம் 2,500/-
சலுகைக் கட்டணம் 1,500/-

குறிப்பு:
- காலை மாலை வகுப்புகள நடைபெறும
- குறிக்கப்பட்ட தொகை மாணவ, மாணவிகளே சேர்க்கப்படுவார்கள்

வார நாள் வகுப்புகள் ஆரம்பம்: 15-04-94
சனி, ஞாயிறு வகுப்புகள் ஆரம்பம்: 16-04-94

Join With Us to Study The Latest Computer Technology

மேலதிக விபரங்கட்கு:
வெலிங்டன் சந்திக்கருகில்.

***37, Clock Tower Road, JAFFNA.***

(இ-9097)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.



### சிந்தனைக்கு

நிர்ப்பந்தத்திற்கு நெறிமுறைகள் கிடையாது,
-புப்லிலியஸ் சைரஸ்

# ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 12-04-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## அரசிற்கொரு அபாய அறிவிப்பு

சிறிலங்கா அரசியலிலும் சரி ஏனைய அரசங்களிலும் சரி ஆயுதப்படையினரின் முதன்மை அதிகரித்துள்ளது. பொது வைபவங்களில் சீருடையினர் கலந்துகொள்வதில் இருந்து அரசியலில் பங்குகொள்ள முற்படுவது வரை ஆயுதப் படையினரின் நடவடிக்கைகள் விரிவு பட்டுவருகின்றன

இதன் ஓர் அம்சமாகவே, ஆயுதப்படையைச்சேர்ந்த உயர்நிலை அதிகாரிகள் பலர், பொதுத்தேர்தலில் போட்டியிட பொதுமக்கள் ஐக்கிய முன்னணியிடம் இட ஒதுக்கீடு கேட்டு விண்ணப்பித்திருப்பதைக் கொள்ளமுடியும்.

பொதுஜன மக்கள் ஐக்கிய முன்னணியின் செயலாளர் தமது கட்சியின் பலம் அதிகரித்துவருகின்றது என்பதை வெளிக்காட்டுவதற்காக இதனை வெளியிட்டிருக்கலாம். ஆனால், பொதுஜன ஐக்கிய முன்னணிச் செயலாளர் குறிப்பிட்டுள்ளது உண்மையானால், அது சிறிலங்கா அரசியலில் முக்கியமான பல மாற்றங்களுக்கு வழிவகுக்கும் என்பதோடு, பல புதிய பரிணாமங்களுக்கும் உள்ளாக வேண்டிவரலாம்.

ஜனநாயக ரீதியான அமைப்புக்களில் இராணுவத் தரப்பினர் பிரவேசிப்பது என்பது பொதுவாக பாரதூரமான பிரச்சினைகளைத் தோற்றுவிக்கக்கூடியதாகும். பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் நாடுகளின் ஆட்சியில் இராணுவம் குறுக்கிட்டமையானது, அந்நாடுகளின் அரசியல் வரலாற்றையே மாற்றியமைத்ததோடு, ஜனநாயகரீதியான ஆட்சி என்பது கேலிக்கும், கேள்விக்கும் ஒன்றாக மாறியதை இங்கு சுட்டிக்காட்டமுடியும்.

இப்பொழுது சிறிலங்கா படை அதிகாரிகள் அரசியலில் பிரவேசிக்க முற்படுவதற்கு பல காரணங்கள் இருக்கலாம். இதில் ஒன்று போரின்மீது அவர்கள் கொண்டுள்ள வெறுப்பு காரணமாக இருக்கலாம். சிலவேளை அரசியல் அதிகாரத்தின் சுவையை அறிந்திருக்கலாம்; அல்லது அனுபவித்தும் இருக்கலாம். இவ்விரண்டையும் விட வேறுபல காரணங்களும் இருக்கலாம்.

# நெருக்கடி நிலையில் சிக்கி ஜனாதிபதி விஜேதுங்கா தவிப்பு

### சென்னை 'இந்து' விமர்சனம்

(கொழும்பு)

தென் மாகாணசபைத்தேர்தல் முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து ஜனாதிபதி விஜேதுங்காமீது இருமடங்கு நெருக்குதல்கள் இருந்துவருகிறது என்று சென்னையிலிருந்து வெளியாகும் இந்து பத்திரிகையில் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் குறிப்பிடப்படுகையில், ஆளும் ஐ.தே.கவும் அதன் தலைவர் டி. பி. விஜேதுங்காவும் ''எடு அல்லது விடு'' என்ற வகையிலான தீர்மானமொன்றை மேற்கொள்ள வேண்டியவர்களாக உள்ளனர். காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசா விட்டுச்சென்ற கொள்கைகளையும், பணிகளையும் தொடர்ந்தும் முன்னெடுத்துச்செல்வதா அல்லது அதிலிருந்து விலகிச் சென்றுவிடுவதா என்பதே இன்றைய பிரச்சினையாக அவருக்கு முன்புஉள்ளது.

ருகுணு எனப்படும் தென் மாகாணத்திலுள்ள 21 தேர்தல் தொகுதிகளில் பிரேமதாசாவின் சொந்தத் தேர்தல் தொகுதியான பலப்பிட்டிய தொகுதிமட்டுமே தொடர்ந்தும் ஆளும் கட்சியின் வசம் இருக்கிறது. பிரேமதாசாவின் மகனான சஜித் பிரேமதாசா இப்பகுதிக்குப் பொறுப்பாக நியமிக்கப்படவேண்டுமெனவும், அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் அவர் அங்கிருந்து நிறுத்தப்படவேண்டுமெனவும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

ஆனால் ஐ தே கவினுள் இருக்கும் பிரேமதாசா விமர்சகர்களின் கருத்து மாறுபட்டதாகவுள்ளது. விஜேதுங்காவின் ஆட்சி பிரேமதாசாவின் கொள்கைகளைத் தொடர்ந்தும் அமுல் படுத்துகிறது எனவும் இதனால் மக்களின் ஜனநாயக உரிமைகளை மீளப்பெறுவதற்கு அரசாங்கத்தில் மாற்றம் ஏற்படுவது அவசியம் எனவும் எதிர்க்கட்சிகள் பிரசாரம் மேற்கொள்வதாகவும் அவர்கள் மேலும் குறிப்பிடுகின்றனர்.

இது மக்களால் ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்குமாயின் இத்தேர்தல் முடிவுகள் பிரேமதாசாவின் கொள்கைகளுக்கான ஒரு தெளிவான மறுப்பு என்றும், வறுமை ஒழிப்புக்கான ஜனசவிய திட்டம் பற்றி தொடர்ச்சியான பல விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்தப் போக்கை கைவிட்டு ஒரு புதிய சாதகமான அணுகுமுறையை ஏற்றுக்கொள்ள வேண்டிய தருணம் இது. அதன் பின்னர் மட்டுமே மக்களிடமிருந்து நாம் ஒரு புதிய ஆணையைக் கோரமுடியுமெனப் பிரேமதாசா எதிர்ப்பாளர்கள் கருதுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசியப் பட்டியலில் தெரிவான

## ஐ தே க.பாராளுஉறுப்பினர் பதவிதுறக்க மறுப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்துதாம் வெளியேறமாட்டோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியலில் இருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவான உறுப்பினர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைக் காரியாலயமான சிறிகோத்தாவில் ஜனாதிபதியை சந்தித்த மேற்படி உறுப்பினர் திட்டவட்டமாக இதனை தெரிவித்ததாகவும் சிறிகோத்தாவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களை தமது பதவியை இராஜினாமசெய்யுமாறு கட்சி விடுத்த வேண்டுகோளுக்கு இவ்வாறான பதிலை இவ் உறுப்பினர் தெரிவித்துள்ளதாக மேலும் தெரிய வருகின்றது

இதே வேளை ஏனைய கட்சிகளில்இருந்து கட்சியைவிட்டு வெளியேறிய சில உறுப்பினர்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் பதவி வழங்குவதற்காகவே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## அரச வெற்றிடங்கள் மே மாதம் நிரப்பப்படும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரசாங்க திணைக்களங்களில் காணப்படும் வெற்றிடங்கள் யாவும் அடுத்தமாத முடிவுக்குள் நிரப்பப்படும். இத் தகவலை உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சின் செயலாளரும், அம்பாறை மட்டக்களப்பு மாவட்ட சிவில் சேவை ஒருங்கிணைப்பு அதிகாரியுமான ஒஸ்டின் பெர்னாண்டோ வெளியிட்டார்.

பரீட்சையில் மட்டக்களப்பிற்கான வெட்டுப்புள்ளி இப்போது அரசினால் குறைக்கப் பட்டுள்ளது என்றும், எனவே மாகாண சபையினால் மே மாத இறுதிக்கு முன்பாக வெற்றிடங்கள் நிரப்பப்பட முடியும் என்றும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநகர முதல்வர் உட்பட முக்கிய பிர

### புலிகளின் குரல் வானொலியின் நிகழ்ச்சி நிரல்

1994-04-12செவ்வாய்இரவு

8-01ற்கு - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''அமைதியின் மறுபக்கம்''
8-10ற்கு - அறிந்து கொள்ளுங்கள் - தகவற் களஞ்சிய நிகழ்ச்சி
8-20ற்கு - நலந்தானா நிகழ்ச்சியில் ''வீதி வாகன விபத்துக்களும், அது சம்பந்தமான சில ஆலோசனைகளும்''
8-30ற்கு - செய்திகள்
8 40ற்கு - கருத்துக் களம் ''பதட்டம்''
8-50ற்கு - களமும் கானமும் ''இலட்சிய இணைவு''

1994-04 13 புதன் காலை

7-02ற்கு - மாவீர வணக்கம்
7-15ற்கு - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''பாடுமீன்கள் அழுதன''
7-25ற்கு - நீங்கள் கேட்

## அதிசயத்தை ஏற்படுத்த தொடர்ந்து முயல்கின்றோம்

### பாலஸ்தீனிய பேச்சாளர்

(கெய்ரோ)

அதிசயத்தை ஏற்படுத்த நாங்கள் முயல்கின்றோம் என்று பாலஸ்தீனிய விடுதலை இயக்கப் பேச்சாளர் நபில் சாத் தெரிவித்தார்.

பாலஸ்தீனியரின் பாதுகாப்புத் தலைவராக மேஜர் ஜெனரல் நஸர் யூசப் அறிமுகப் படுத்தப்பட்ட நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அவரிடம் ''ஏப்ரல் 13ம் திகதிக்கு முன்பாக பாலஸ்தீன சுயாட்சி பற்றிய பேச்சுக்கள் பூர்த்தியடையுமா? '' என்று நிருபர்கள் கேள்வி எழுப்பியபோதே அதிசயத்தை ஏற்படுத்தமுயல்வதாக தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் காஸாவிலும், ஜெரிக்கோவிலும் இருந்து இஸ்ரேலியத் துருப்புக்கள் வெளியேறும் நிலையில் அவ் இடங்களில் பாலஸ்தீனிய பொலிசார் வந்து சேர்வார்கள் என்றும் சுமார் 9000 பேர் கொண்ட பாலஸ்தீனிய பொலிஸ் படையை அமைப்பதில் இருசாராரும் இணக்கம் கண்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதேவேளை பேச்சுக்கள் மெதுவாகமுன்னேறிவருவதாகவும் காஸா, ஜெரிக்கோ பகுதிகளுக்குள் பாலஸ்தீனியபொலிசார் எவ்விதம் பிரவேசிப்பது என்பதில் கருத்து வேறுபாடு இன்னமும் இருப்பதாகவும் இஸ்ரேலிய வானொலி தெரிவித்துள்ளது. அண்மையில் படுகொலை நடந்த ஹெப்ரோன் பகுதியில் ஆயுதபாணிகளாக யூதக் குடியேற்றவாசிகள் சுமார் 5000 பேர் வரை இருப்பதும் சுமார் 1, 10,000க்கும் அதிகமான பாலஸ்தீனிய அராபியர்கள் வசிக்கின்றனர் என்பதும்குறிப்பிடத்தக்கது.

## நேட்டோ விமானங்கள் பொஸ்னியாமீது தாக்கு

பொஸ்னியா ஹர்சகோவினாவில் முற்றுகைக்கு உள்ளாகியுள்ள சாஜாபே நகரத்தைச் சுற்றியுள்ள பகுதியில் நேட்டோ விமானங்கள் முதன் முறையாக தாக்குதல்களை நடத்தியுள்ளன.

கடந்த மூன்று வாரகாலமாக இந் நகரத்தை முற்றுகையிட்டிருக்கும் சேர்பு படைகளின் தகவல் தொலைத் தொடர்பு நிலையமொன்று நேட்டோ விமானங்களால் தாக்கி அழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் எப் 16 ரக போர்விமானங்கள் பொஸ்னியாவிலுள்ளஐ நா. படைகளின் வேண்டுகோளுக்கு இணங்கி குண்டுவீச்சுக்களை நடத்தியதாக கூறப்படுகிறது.

## வழிப்பறிக் கொள்ளைக்கு பொறுப்பேற்க வேண்டும்

### மூப்பனார் தெரிவிப்பு

தமிழ்நாட்டில் வழிப்பறிக் கொள்ளைகள் தொடர்ந்து இடம் பெற்று வருகின்றமைக்கு தமிழக அரசுதான் பொறுப்பேற்க வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஜி கே மூப்பனார் கூறியுள்ளார் திருச்சிராப்பள்ளியில் நிருபர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில் மாநில அரசும் காவல் துறையும் மக்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்கத் தவறியமையினாலேயே இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறுவதாகவும் குற்றம் சுமத்தினார்.

## மத்திய ரயில்வே பட்ஜெட்; தமிழகம் வஞ்சிக்கப்பட்டது

### வாழப்பாடி இராமமூர்த்தி

(சென்னை)

மத்திய அரசின் ரயில்வே பட்ஜெட் தமிழ் நாட்டுக்கு ஏமாற்றம் அளிக்கின்றது என்று தமிழ்நாடு இந்திரா

றாகவேயுள்ளது சென்னை லஸ் கடற்கரை பறக்கும் ரயில் திட்டத்தை அடுத்த ஆண்டிற்குள் முடிப்பதற்கான சாத்தியக் கூறு கண்ணுக்கு

...ேள வெறுப்பு காரணமாக இருக்கலாம்; சிலவேளை அரசியல் அதிகாரத்தின் சுவையை அறிந்திருக்கலாம்; அல்லது அனுபவித்தும் இருக்கலாம். இவ்விரண்டையும் விட வேறு பல காரணங்களும் இருக்கலாம்;

ஆனால், காரணம் எதுவாக இருப்பினும், ஆயுதப் படையினர் ஆட்சி அதிகாரத்தில் அமரவேண்டும் அல்லது ஆட்சியில் நேரடிப் பங்குபெறவேண்டுமென அபிலாஷை கொள்ளத் தொடங்கிவிட்டனர் என்பதே உண்மையாகும் இது சிறிலங்கா அரசியலில் பல புதிய பரிணாமங்களை தோற்றுவிக்கக்கூடியவையாகும்;

ஆனால், சிறிலங்கா ஆயுதப் படையினர் ஆரம்பத்தில் அரசியல் அபிலாசைகளை பெருமளவில் கொண்டிருக்க வில்லை இன்று அவர்களை அரசியலில் ஈடுபடத் தூண்டியவர்களும், ஈடுபடவைத்தவர்களும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியினரேயாகும்.

இதேவேளை, ஒப்பீட்டுரீதியில் சிறிலங்கா இராணுவத்தினர் அனுபவித்துவரும் வசதிகளும், சலுகைகளும் அதிகமாகும். இவை இன்று அதிகாரத்திலுள்ள அரசியல்வாதிகள் அனுபவிக்கும் வசதிகளுக்கு அடுத்த கட்டத்தில் உள்ளன. ஆயுதப்படையினர் தமது தேவைகளை எந்தவித நெருக்கடியுமின்றி இலகுவாகவும், விரைவாகவுமே பெற்றுக்கொள்ளக்கூடியதாகவுள்ளது.

அத்தோடு, ஆயுதப்படையினருக்கு சட்டரீதியாகவே பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன; அவர்களின் மனித உரிமை மீறல்கள் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் என்பனவற்றிற்கு அரசாங்கம் சட்டரீதியாகப் பாதுகாப்புக் கொடுப்பதில் முனைப்பாகவுள்ளது.

இவை யாவற்றிற்கும் மேலாக அரசியற் தீர்மானங்களில் இராணுவம் செல்வாக்குச் செலுத்தும் அல்லது தீர்மானிக்கும் சக்தியாகவே உருவாகியுள்ளது. அதாவது இராணுவத்தைப் புறந்தள்ளி வைத்துவிட்டு அரசியலில் தீர்மானம் எதையும் அரசாங்கத்தினால் இன்று எடுத்துவிடமுடியாது என்பதே உண்மையாகும்;

இந்நிலையில், ஆயுதப்படையில் உள்ளவர்கள் அரசியலில் ஈடுபடவிளைவதென்பது அதிகாரத்தின் சுவையை அறிந்தமையினாலேயே ஆகும். இவர்கள் யுத்தத்திற்கு ஆதரவானவர்களாக இருக்கலாம் அல்லது எதிரானவர்களாகவும் இருக்கலாம்; அரசாங்க உத்தியோகத்தர்என்ற நிலையில் இருந்து ஆட்சியாளனாக மாற ஏற்படுவதன் விளைவே இதுவாகும். ஆனால், இதற்கு வேறு யாரும் காரணமல்ல; சிறிலங்காவை இராணுவ மயப்படுத்திய ஐ தே கட்சியே முழுப்பொறுப்புமாகும்; ஆனால் இது இன்று ஐ. தே. க. அரசாங்கத்திற்கு மட்டுமல்ல சிறிலங்கா அரசிற்குக் ஆயுதப்படையிடம் இருந்து கிடைக்கும் அபாய அறிவிப்பு என்பதில் சந்தேகம் தேவையில்லை;

...கள் அமைச்சின் செயலாளரும், அம்பாறை மட்டக்களப்பு மாவட்ட சிவில் சேவை ஒருங்கிணைப்பு அதிகாரியுமான ஒஸ்டின் பெர்னாண்டோ வெளியிட்டார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற உயர்மட்ட அதிகாரிகளின் மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில், எழுது வினைஞர்களை தெரிவு செய்வதற்காக நடத்தப்பட்ட போட்டிப்...

...

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநகர முதல்வர் உட்பட முக்கிய பிரமுகர்கள் மற்றும் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்ட இம் மாநாட்டில் தமிழ்மொழி முற்றாக புறக்கணிக்கப்பட்டதுடன், ஆங்கில மொழியில் மட்டுமே கலந்துரையாடல்கள் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது ஆகும்.

...கம்

7-15ற்கு - அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''பாடுமீன்கள் அழுதன''

7-25ற்கு - நீங்கள் கேட்டவை

7-45ற்கு - செய்திகள்

7-50ற்கு - பத்திரிகைச் செய்திகள்

7-55ற்கு - தாயகப் பாடல் என்பன இடம் பெறும்

(சென்னை)

மத்திய அரசின் ரயில்வே பட்ஜெட் தமிழ் நாட்டுக்கு ஏமாற்றம் அளிக்கின்றது என்று தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் ரயில்வே மந்திரி தென்நாட்டை சேர்ந்தவராக இருக்கும் போதும் அவர் அளித்துள்ள வரவு - செலவுத் திட்டம் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஏமாற்றம் தரும் ஒன்றாகவேயுள்ளது சென்னை லஸ் கடற்கரை பறக்கும் ரயில் திட்டத்தை அடுத்த ஆண்டிற்குள் முடிப்பதற்கான சாத்தியக் கூறு கண்ணுக்கு புலப்படவில்லை. தமிழகத்தில் புதிய ரயில் பாதை அமைக்கும் திட்டம் புதிய மின் மயமாக்கும் திட்டம் போன்ற திட்டங்கள் இடம் பெறவில்லை, இவற்றைப் பார்க்கும்போது தமிழகம் வஞ்சிக்கப்பட்டு விட்டதாகவே தோன்றுகிறது எனவும் தெரிவித்தார்.

# கலைஞரின் சுயநல அரசியலே தி. மு. க. பிளவுக்கு காரணம்

## வை. கோபாலசாமி தெரிவிப்பு

(சென்னை)

கோட்டையில் திராவிட இயக்கக் கொடி பறந்தும் தமிழ் நாட்டுக்கு வரவேண்டிய திட்டங்கள் ஏன் இன்னும் வரவில்லை என்று போட்டி தி. மு. க பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி கேள்வி எழுப்பியுள்ளார்;

குன்றத்தூர் பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், திராவிட இயக்க கொடி ஜார்ஜ் கோட்டையில் பறந்துகொண்டிருக்கும் போதும் இந்தநாட்டுக்கு வரவேண்டிய திட்டங்கள் ஏன் இன்னும் வரவில்லை; இந்தநாடு ஏன் இன்னும்செழிக்கவில்லை? வளமார்ந்த தமிழகம் - தரணி புகழ வாழ்ந்த தமிழகம் தரம் குன்றிக் கிடப்பதற்கு காரணம் என்ன? வறுமையும்- வாட்டமும் - ஏக்கமும்- ஏழ்மையும்- தமிழ்நாட்டை இன்னமும் சுற்றி வளைத்து அழிப்பதற்கு என்னகாரணம்?

இங்கே உற்பத்தியாகின்ற பொருள்களை கடல்கடந்த நாடுகளுக்கு எடுத்துச்சென்றோமே. இங்கே தயாரிக்கப்பட்ட பட்டுத்துணிகளை கொண்டு போய் ரோமாபுரியிலே விற்றுவிட்டு வருமளவுக்கு வணிகம் செழித்துக் கிடந்ததே;

இத்தனையும் இருந்தும்கோட்டையின் கொடி மரத்தில் திராவிட இயக்கக் கொடி பறந்தும் நாம் ஏன் பெறவேண்டிய உரிமைகளைப் பெறமுடியாமல் போயிற்று? பேரறிஞர் அண்ணா உயிருடன் இருந்திருந்தால் தமிழ்நாடு இந்தியாவின் தலைவிதியை தீர்மானித்திருக்கும். இந்த தமிழ் நாட்டுக்கு வரவேண்டிய திட்டங்கள்வந்துசேர்ந்துஇருக்கும்

அண்ணாவின் மறைவுக்கு பின்னர், சுயநலவாத அரசியல் காரணமாக இயக்கம் வளரவில்லை உடைக்கப்பட்டது அதற்கு யார் காரணம்? கலைஞர்தான் காரணம்!

நீங்கள் எந்தக் குற்றமும் செய்யாத என்னை இயக்கத்திலே இருந்து வெளியேற்ற தொடர்ந்து மூன்றாண்டு காலமாக முனைந்து ஒன்றும் நடக்காமல் போக கடைசியில் கொலைத் திட்டத்திற்கு உடந்தையாகிய சதிகாரன் என்ற பழியை சுமத்தி அழிக்கநினைத்தபோது தி மு க தொண்டர்களும் அவசரப்பட்டிருந்தால் இந்த வை. கோவின் கதையும் என்றோ முடிந்து போயிருக்கும் எனவும் தெரிவித்தார்.

# ஜெயலலிதாவின் ஆட்சி தமிழகத்தின் பொற்காலம்

## இ. காங்கிரஸ் எம். எல்.ஏ

(சென்னை)

ஜெயலலிதாவின் பொற்கால ஆட்சி நீடிக்கவேண்டும் அவருக்கு நாங்கள் என்றும் துணையாக நிற்போம். இவ்வாறு காங்கிரஸ் கட்சியின் சட்டப்பேரவை உறுப்பினர் தெய்வநாயகம் தெரிவித்தார்

முதலமைச்சர் ஜெயலலிதாவின் 46-வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை ஆவின் பாலகம் அருகே வனச்சோலை அமைக்கப்படுவதற்கான மரம் நடும் விழாவில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில் இந்த விழாவில் கலந்து கொள்ள யாருக்கும் பயப்படாமல் நான் வந்துள்ளேன் என்றார்.

# நான் ஆன்மீகத்துறைக்கு எப்போதும் விரோதியல்ல

## - மு. கருணாநிதி

(சென்னை)

நான் ஆன்மீகத்துக்குவிரோதியல்ல. ஆனால் ஆன்மீகத்தைத் தவறாகப் பயன்படுத்தி மக்களை மாக்கள் ஆக்கும் முயற்சிக்கு நானும் எமது இயக்கமும் விரோதிகளாகவே இருக்கிறோம்.

இவ்வாறு தி மு. க தலைவர் மு கருணாநிதி தெரிவித்தார் சென்னை விருகம்பாக்கத்தில் நடைபெற்ற ''குருதேவ தர்மம்'' என்ற நூல் வெளியீட்டில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், நாட்டில் ஜாதியும், மதமும் சேர்ந்து பயங்கர கேடுகளை உருவாக்கியுள்ளன. ஜாதி, மத பேதம் கூடாது என்று நாராயண குரு கூறினார். அவரைப்போலவே எத்தனையோ பேர் போராடியும் இன்னும் சீர்படவில்லை

அதற்காக நாம் அந்த முயற்சியை விட்டுவிட முடியாது. தொடர்ந்து பாடுபடவேண்டுமெனத் தெரிவித்தார்;

இவ்விழாவில் கலந்துகொண்ட மகாராஷ்டிரா மாநில முன்னாள் ஆளுநர் சி சுப்பிரமணியத்தையும், என்னையும் அருகருகே அமரவைத்த சக்தி நாராயண குரு சக்தி எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் 1957-ல் சட்டசபையில் நானும் அவரும் எதிரெதிரே இருந்தோம். அவர் நிதி அமைச்சராக இருந்தார். பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்தார். அப்போது சட்டசபையில் கருத்துக்கள் ஏற்கப்படாமல் எதிர்த்துப் பேசுகின்ற சமயத்தில்கூட அரசியல் நாகரிகமும் தமிழர் பண்பாடும் பேணப்பட்டுவந்ததுஎன்றார்.

இவ்விழாவில் நூலை வெளியிட்டு வைத்து உரையாற்றிய மகாராஷ்டிராவின் முன்னாள் முதல்வர் சி. சுப்பிரமணியம் தமது உரையில், பல வருடங்களுக்குப் பின்னர் நானும், கலைஞரும் ஒரே மேடையில் இருக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது நான் அரசியலில் இருந்து ஒதுங்கிக்கொண்டேன். கலைஞர் தீவிர அரசியலில் உள்ளார். இந்த இரண்டு பேரையும் சேர்த்து வைக்கக் கூடிய சக்தி நாராயண குருவுக்கு இருந்திருக்கிறது எனத் தெரிவித்தார்;

**தடை எல்லாம் உடைத்திடலாம்**
**தரிசு நிலமெல்லாம் பயிர் செய்தால்!**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# காங்கேசனில் கடற்படையால் பொருள் அபகரிப்பு தொடர்கிறது

## அனுமதி பெற்றாலும் பறிப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை துறைமுகத்தில் கடற்படையினரால் பயணிகளிடம் தொடர்ந்தும் பொருள்கள் அபகரிக்கப்படுகின்றன.

யாழ். அரசாங்க அதிபர் இது குறித்து சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சிடம் கோரிக்கை விடுத்தபோதிலும் காங்கேசன்துறை துறைமுகத்தில் தொடர்ந்தும் கடற்படையினரால் பயணிகள் எடுத்துவரும் பொருள்கள் அபகரிக்கப்படுகின்றன.

சமீபத்தில் கொழும்பில் வைத்து யாழ். அரசாங்க அதிபர் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளிடம் காங்கேசன்துறை துறைமுகத்தில் கடற்படையினரின் கெடுபிடிகள் குறித்து முறையிடப்பட்டதுடன், பயணிகள் எடுத்துவரும் பொருள்கள் அபகரிக்கப்படுவது குறித்தும் எடுத்துக் கூறப்பட்டது.

இது குறித்து பாதுகாப்பு அமைச்சு உடன் நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அனுமதி வழங்கப்பட்ட பொருள்களும், தடையற்ற, அல்லது தடை நீக்கப்பட்ட பொருள்களும் எடுத்துச் செல்வதற்கு உதவும்படி பாதுகாப்பு அமைச்சு காங்கேசன்துறை துறைமுக கடற்படையினருக்கு அறிவித்தல் விடுத்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், கடந்த தடவை காங்கேசன்துறை துறைமுகத்தில் சோதனையில் ஈடுபட்ட கடற்படையினர் பயணிகள் சிலரிடம் உள்ள தடையற்ற பொருள்களை அபகரித்துள்ளனர்.

தாம் அனுமதி பெற்று எடுத்து வந்த மருத்துவ பொருள் ஒன்றை கடற்படையினர் கைப்பற்றி விட்டனர் என்று பயணி ஒருவர் யாழ். அரச அதிபரிடம் முறையிட்டுள்ளார்.

இது குறித்து யாழ். அரசாங்க அதிபர் மேலதிக நடவடிக்கை எடுக்க உள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

(தி) (சி)

கல்விக்கழக கருத்தரங்கில்

# கலந்து கொள்ளாதோர் நியமனம் ரத்தாகும்

(நல்லூர்)

நல்லூர் - யாழ்ப்பாணக் கோட்டத்தில் கல்விக்கழக ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்கள் கருத்தரங்கில் கலந்துகொள்ளாது விட்டால் அவர்களது நியமனம் ரத்துச் செய்யப்படும் என இக்கோட்டங்களின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். இந்த ஆசிரியர்களுக்கான கருத்தரங்கும் செயலமர்வும் வரும் வெள்ளிக்கிழமை மு. ப. 8. 30க்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது; கருத்தரங்கு தொடர்ந்து இம்மாதம் 20ஆம் திகதி வரை நடைபெறும் என்று பிரதிக் கல்விப் பணிப்பாளரின் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## ஆசிரியர்கள் தேவை

1. உடற்கல்வி
2. கைப்பணி
3. சித்திரம்
4. சங்கீதம்

ஆகிய நான்கு பாடங்களுக்கான ஆசிரியர்கள் தேவை.

ஊதியத்திட்டம்:- 2010/- - 55/- 14 - 65/- 6 3170/-

சேவைக் காலத்தைப் பொறுத்து படிகள் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி:- 18. 04. 1994

செஞ்சோலை
நிர்வாகத்தினர்.

அனுப்ப வேண்டிய முகவரி:-
விவ. இல. 321
ஈழநாதம்,
இல: 31, மகேந்திர வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/9111)


## சிரமதானம்

சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தக சங்கத்தினர் அன்னைபூபதி நினைவாக சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் சிரமதானப் பணிகளை செய்தனர். இப்பணியில் அனேக மக்கள் பங்கு பற்றிச் சிறப்பித்தனர்.

## குண்டு வெடிப்பு

வும் ஆனால் இவர் எந்தவொரு தொழிலும் செய்யவில்லையென்றும் அயலவர்களுக்கு தான் ஓர் வியாபாரி என கூறிக்கொண்டு இருந்துள்ளதாகவும் விசாரணை மூலம் தெரிய வந்ததாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி லயனல் குணதிலக மேலும் தெரிவித்தார்.

இவரின் வீடு சோதனை இடப்பட்டபோது அங்கு


சகல வீடியோ நாடா விநியோகஸ்தர்களுக்கும்

வெளிவந்து விட்டது

“ஒளி வீச்சு பெப்ரவரி - 94”

யாழ் மாவட்டத்திலுள்ள சகல வீடியோ நாடா


# முதுகலைமாணி பட்டம்

பேராதனை பல்கலைக்கழக மெய்யியல் சிறப்பு பட்டதாரியான திரு வேலுப்பிள்ளை யுகபால சிங்கம் “மேலைத்தேய மெய்யியலில்” முதுகலைமாணிப் பட்டம் பெற்றுள்ளார்.

இலக்கிய மற்றும் மெய்யியல் நூல்களை எழுதியுள்ள இவர் மெய்யியற்துறை வெளிவாரி பட்டதாரி மாணவர்களுக்கு கடந்த 17 வருடங்களாக விரிவுரை நிகழ்த்தி வருகிறார். முன்னர் இவர் பேராதனை யாழ்ப்பாண பல்கலைக்கழகங்களில் மெய்யியல் உதவி விரிவுரையாளராகவும், பகுதி நேர விரிவுரையாளராகவும் கடமையாற்றியவர்.

மாகாணசபை நியமனம்

# 37 ஊழியர் தொடர்ந்தும் செயலகத்தில் பணிபுரிவர்!

(யாழ்ப்பாணம்)

மாகாண சபையால் நியமனம் பெற்ற 37 ஊழியர்களும் தொடர்ந்தும் யாழ். செயலகத்திலேயே பணிபுரிவர் என்றும், இதற்கான அனுமதியை அரசாங்க அதிபர் பெற்று வந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச செயலக நிர்வாக முறை யாழ்ப்பாணத்தில் செயல்படுத்தப்பட்டவுடன் இந்த ஊழியர்கள் அனைவரையும் பிரதேச செயலகங்களில் பணிபுரியும் படி மாகாணசபை கேட்டுக் கொண்டது.

ஆயினும் யாழ். அரச அதிபர் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த அனைத்து ஊழியர்களும் தொடர்ந்து செயலகத்திலேயே பணிபுரிவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம் இந்த ஊழியர்கள் தமது சம்பளத்தை பிரதேச செயலகத்திலேயே பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது. (தி), (ஸ)

# நகைஅடைவுமீளப்பெறுதல் வாடிக்கையாளர் சிரமம்

(நமது நிருபர்)

மக்கள் வங்கி கிளைகளில் நகைகளைஅடைவுவைத்தோர் அவற்றை கொழும்பில் மீட்பதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

நகைகளை மீளப் பெறக் கொழும்பு செல்லும் இவர்கள் பல நாட்களாக மருதானை மக்கள் வங்கி கிளைக்கு அலைந்து திரிய வேண்டிய நிலை தொடர்வதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

க.பொ.த (சா/த) பரீட்சை முடிவு

# மீள் பரிசீலனைக்கு விண்ணப்பிக்கலாம்

கடந்த வாரம் முடிவு வெளியான க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையின் விடைத்தாள்களை மீள் பரிசீலனை செய்ய விண்ணப்பிக்கலாம். இதற்கான முடிவு திகதி இம்மாதம் 29ஆகும். ஒரு பாடத்துக்கு ஒரு விண்ணப்பம் என்ற வகையில் ஒரு பாடத்திற்கான கட்டணம் ரூபா 60 பெறுமதியான முத்திரை ஒட்டி விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

## ராணுவ

நிலை காணப்படாமை புலிகளுடனான போரில் படை அதிகாரிகளுக்கு சிரமங்களை ஏற்படுத்துவதாக படை ஆய்வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்தே புதிய நிர்வாக ஒழுங்கு குறித்த மூத்த அதிகாரிகள் ஆராய்ந்து வரு

## குண்டைவெடிக்க

வரிலை சேர்ந்தவர் என்றும்

# ருவான்டா மோதல் தொடர்கிறது ஆயிரக்கணக்கானோர் பலி

## மக்கள் அண்டை நாடுகளுக்கு தப்பிஓட்டம்

(கிகாலி)

கடந்தசில தினங்களாக ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் நடைபெற்ற மோதலில் 1000க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். ருவாண்டா கிளர்ச்சி வாதிகள் நேற்று முன்தினம் யுத்த நிறுத்தத்திற்கு சம்மதித்த போதிலும் தலைநகரான கிகாலியில் ஆங்காங்கு மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

ருவாண்டாவின் ஆயிரக்கணக்கான சிறுபான்மையினத்தவரான டுட்சி இனத்தவர்கள் எல்லை கடந்து அயல்நாடான சயர் நாட்டுக்கு அகதிகளாக சென்றுள்ளனர். முன்னாள் பெல்ஜிய குடியேற்ற நாடான ருவாண்டாவில் தற்போதும் அங்கு வாழும் பெல்ஜியப் பிரஜைகளை பாதுகாக்கும் நோக்கில் அங்கு பெல்ஜிய பராதுருப்புகள் சென்று இறங்கியுள்ளன. இங்கு 1500 பெல்ஜிய மக்கள் வாழ்கின்றனர்.

நாட்டின் டுட்சி சிறுபான்மையினத்தவர்களுக்கு எதிராக பெரும்பான்மையினமான ஹூட்டு இனத்தவரை அதிகமாகக் கொண்ட ருவாண்டா இராணுவமும் ஆயுத இளைஞர் குழுக்களும் தாக்குதல் நடத்தி வருகின்றனர். காயமடைந்த மக்களுக்கு சிகிச்சை வழங்க போதிய வைத்தியர்கள் இன்மையால் பலர் உயிருடன் புதைக்கப்பட்டனர். நகரில் ஒழுங்கைப் பராமரிக்க தமது இரு படைப்பிரிவுகள் தலைநகரை நெருங்கி விட்டதாக ருவாண்டா கிளர்ச்சிவாதிகள் கூறினர்.

ஆபிரிக்க நாடான ருவாண்டாவிற்கு 1962 இல் பெல்ஜியத்திடமிருந்து விடுதலை கிடைத்தது முதல் பெரும்பான்மை ஹூட்டு இனத்தவருக்கும் டுட்சி சிறுபான்மை இனத்தவருக்குமிடையில் இனமோதல்கள் நடைபெற்று வருகிறது. ருவாண்டாவின் அயல் நாடான புருண்டியிலும் ஹூட்டு இனத்தவர்களே பெரும்பான்மையினராக உள்ளனர். இங்கும் சிறுபான்மை டுட்சி இனத்தவருடன் இனமோதல்கள் நடைபெற்று வருகிறது.

இவ்வின மோதல்கள் குறித்து சர்வதேச உதவியுடன் சமாதானப் பேச்சுகள் நடந்த ருவாண்டா, புருண்டி நாட்டு ஜனாதிபதிகள் தன்சானியா சென்றுவிட்டு திரும்பிக் கொண்டிருக்கையில் கடந்த புதனன்று அவர்கள் பயணம் செய்த விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது. இரு நாட்டு ஜனாதிபதிகளும் கொல்லப்பட்டனர். இச் சம்பவத்தை அடுத்து ருவாண்டாவில் இனமோதல் கடந்த சில தினங்களாக உக்கிரமமாக நடைபெற்று வருகின்றன.


ஆதரவற்ற சிறார்களின் வளர்ச்சி நிதிக்கான

“ராசி சில்க்ஸ்”

ஆதரவில் மின்னொளியில் மிளிரப்போகும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி - 1994

இடம்: பரியோவான் கல்லூரி மைதானம்
காலம்:- 12 - 04 - 1994
நேரம்:- பி. ப. 7. 00 மணி

பிரதம விருந்தினர்:- திரு. க. அருணகிரிராஜா
(உதவிக் கல்விப்பணிப்பாளர், உடற்கல்வி-கல்வி வலயம்)
சிறப்பு விருந்தினர்:- சி. தியாகராஜா
(தலைவர் யாழ். மாவட்ட உதைபந்தாட்டச் சபை)

பங்குபெறும் அணிகள்:
(1) பல்கலைக்கழக விளையாட்டுக் கழகம் எதிர் அம்பாள் விளையாட்டுக்கழகம்
(2) சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் எதிர் மாவத்தை விளையாட்டுக் கழகம்

பிரவேசம் ரூபா 25.00
சிறுவர்களுக்கு மட்டும் 10.00
★ பந்து விளையாட்டை ரசிப்பதுடன் சித்தைக்கினிய சிறார்களுக்கும் உதவுங்கள்

## "ஒளி வீச்சு பெப்ரவரி - 94"

யாழ் மாவட்டத்திலுள்ள சகல வீடியோ நாடா விநியோகஸ்தர்களும் தவறாது கலை ஊடக இணையத்தில் இவ் ஒளி வீச்சை பதிவு செய்து (RECORDING) பெற்றுக் கொள்ளவும்.

**பதிவுக்கட்டணம் 100 ரூபா மட்டுமே**

**கலை ஊடக இணையம்**

(இ-9114)



## கணக்காய்வாளர் தேவை

யாழ். நகரிலுள்ள வியாபார நிறுவனமொன்றிற்கு முன் அனுபவமுள்ள கணக்காய்வாளர் தேவை. முன் அனுபவம் இருத்தல் வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதி 18-4-94.

விளம்பர இல. 323,
மே/பா ஈழநாதம்,
யாழ்ப்பாணம்.

(8009)



## யாழ் ஸ்ரீதர் திரையில்

இன்று முதல் எம். ஜி. ஆர், நடித்த

## மதுரை வீரன்

தினசரி பி.ப. 230, மாலை 6. 00 மணி
சனி, ஞாயிறு மு. ப. 10. 30 மணி
மாலை 6. 00 மணி
13ம், 14ம் திகதிகளில்
மு.ப. 10. 30 மணி, பி. ப, 2. 30, 6. 00 மணி

பெப்ரவரி 94
**ஒளிவீச்சு**
ஒவ்வொரு சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் பி. ப. 2. 30 மணிக்கு காண்பிக்கப்படும்.

(இ-9089)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 12ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


குண்டுகள் மேலும் தெரிவித்தார்.

இவரின் வீடு சோதனை இடப்பட்டபோது அங்கு நான்கு கிளேமோர் கொண்ட குண்டு கண்டுபிடிக்கப்பட்டிருந்ததாகவும் பொலிசார் விசாரணை தீவிரமாக மேற்கொண்டதினால் இக் குண்டை கண்டுபிடிக்கக்கூடியதாக இருந்ததாகவும் அவ்வாறு செயல்படாது இருந்திருந்தால் இவரின் சாக்கள் இக் குண்டை அப்புறப்படுத்தி இருக்கும் சாத்தியக்கூறு அதிகமாக காணப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### பலம்

வைதான் ஆனால் கட்டடங்கள் நிறையவுள்ள பகுதிகளில் இவற்றை பயன்படுத்த முடியாது. பலமான விமானப் படையே தேவை.

### 50 விடுதலைப்

பப்பட்டுள்ளதாகவும் இவர் கல்கிசை புனித தோமஸ் பாடசாலை மாணவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. குண்டு வெடிப்பில் மரணமடைந்தவர் தன்னுடன் கொண்டுசென்ற கைப் பை பொன்றும், இடுப்பில் கட்டும் பெல்ட், கைக்கடிகாரம் மற்றும் சத்திய சாய்பாபாவின் புகைப்படம் ஒன்றையும் வைத்திருந்தார் என்றும் தற்போது அது பொலிசாரினால் கண்டுபிடிக்கப்பட்டதாக புலனாய்வுத்துறையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

### நரேமா

என்று யாழ். அரசாங்க அதிபர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இதே சமயம் எதிர்வரும் 21 ஆம் திகதி நரோமா கப்பலில் பயணம் செய்ய பெயர் பதிந்திருப்போருக்கு மேற்படி புதிய நடைமுறையின் படியே பயண ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும்.

இப் பயணிகள் உடனடியாக யாழ். செயலகத்தில் கப்பல் பயணக் கட்டணத்தை செலுத்த வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (தி), (சி)

ஏற்படுத்துவதாக ... வாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்தே புதிய நிர்வாக ஒழுங்கு குறித்து மூத்த அதிகாரிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

புதிய ஒழுங்கின் கீழ் படைப்பிரிவுகள் அதிகரிக்கப்பட்டு நிர்வாகம் கீழ் நிலை அதிகாரிகள் மட்டத்தில் பரவலாக்கப்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### கிழக்கில்

கின்றன தீர்வுத்திட்டங்களை முன்வைப்பவர்கள் எதிர்க்கப்படுவதோடு விமர்சிக்கவும் படுகிறார்கள் இந்தக் கட்சிகள் தமது தீர்வுத் திட்டங்களை இன்னும் முன்வைக்கவில்லை பிரதான கட்சிகளும் தமது திட்டங்களை வெளியிடவில்லை இது துன்பகரமான நிலையாகும்.

இது யுத்தத்தினால் தீர்க்கக் கூடிய பிரச்சினை அன்று எந்த நாட்டிலாவது தீவிரவாதம் இராணுவ அணுமுறையால் தீர்க்கப்பட்டது என்று வரலாற்றில் பதிவு இல்லை. இந்தப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் ஒருவழி பேச்சுவார்த்தை மூலமே ஓர் அரசியல் தீர்வுக்கு நாம் வராது போனால் அது எமது துர் அதிர்ஷ்டமாகும்.

எனது யாழ்ப்பாணப் பயணம் சமாதானப் பயணம் அதனால் நான் பயப்படுவதற்கு நியாயமில்லை நான் அங்கு சென்றால் எனக்கும் பாரிய வரவேற்பு அளிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டதாக அறிகின்றேன் நான் ஜனாதிபதியை மறுபடியும் சந்தித்து யாழ்ப்பாணம் போவதற்கான அனுமதியைப் பெறவுள்ளேன். அரசு ஒரு ஹெலியைத் தர மறுத்தால் நான் எனது பயணத்துக்கு ஒரு ஹெலியை வாடகைக்கு அமர்த்தக் கூடத் தயாராக இருந்தேன்.

விடுதலைப் புலிகளுடன் பேசி அவர்களுடைய கோரிக்கையை அரசுக்குத் தெரிவிப்பது தான் எனது பயணத்தின் நோக்கம் அரசின் முடிவையும் புலிகளுக்குத் தெரிவிப்பதாக இருந்தேன் என்றார்.

... பப்பட வேண்டும்'

### குண்டைவெடிக்க

வரிசை சேர்ந்தவர் என்றும் இவர் 1964-ம்ஆண்டு ஜூலை மாதம் இரண்டாம் திகதி பிறந்தவர் என்றும் தாம் கண்டுபிடித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர் தொடர்பான மேலதிக விபரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளபோதும் பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டும் மேலதிக விசாரணை மேற்கொள்ள இருப்பதினாலும் இவற்றை வெளியிட முடியாது என சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி 'தினமின' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார்.

இவர் கொழும்பில் இரத்மலானை சம்புபல் பிளேஸ் பகுதியில் வசித்தவர் என்றும் இவரின் வீட்டிலிருந்த குண்டு மற்றுமோர் கேந்திர இடத்தில் வெடிக்கச்செய்ய திட்டமிடப்பட்டிருந்தது எனவும் பொலிசார் கூறியுள்ளனர்.

### தந்திரோபாய

பாட்டை ஒரு சீரான தன்மைக்குள் கொண்டு வருவதற்காக இராணுவம் பல பிரிவுகளை உருவாக்குகின்றது. களத்தில் இராணுவத் திறமையை மேலும் சிறப்பாக்க கவச வாகனங்கள் தேவையாக உள்ளது எனவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

### அவ்ரோ

யிலும், யாழ்நகரம், சாவகச்சேரி பகுதிகளிலும் புத்தாண்டுப் பொருள்கள் கொள்வனவுகளில் ஈடுபட்டு நின்ற மக்கள் மத்தியிலும் பதற்ற நிலை ஏற்பட்டது. (21)

### 12 வயது சிறுவன்

படை நீர்மூழ்கி வீரர்களுடன் படகுகளில் தொடர்ந்து சென்றிருந்தனர்.

1950இல் இலங்கைத் தமிழரான நவரத்தினசாமி என்பவரும் அதன்பின் கே. எஸ். ஆனந்தனும் பாக்கு நீரிணையை கடந்து சாதனை புரிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


சிறுவர்களுக்கு மட்டும் 10.00
★ பந்து விளையாட்டை ரசிப்பதுடன் சிந்தைக்கினிய சிறார்களுக்கும் உதவுங்கள்

(இ-9041)


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்
## 11 - 04 - 1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்-1626

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

42-8263, 42-0526, 26-5244, 26-6775, 42-2397, 43-0517, 27-7537, 28-882, 27-2088, 41-7693, 26-4281, 22-728, 42-1464, 42-1059, 24-3063, 22-6897, 42-3345, 26-6075, 22-6073, 41-9480, 42-2862, 24-3262.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

28-7560, 26-7525, 43-1019, 41-9855, 26-3812, 24-5955, 26-7217, 26-4726, 27-8754, 26-6645, 26-8674, 27-4019, 40-2595, 40-2394, 24-4367, 43-2524, 28-1706.

## மரண அறிவித்தல்
## பொன்னையா துரைசிங்கம்

(நாட்டுக் கூத்துக்கலைஞர் தம்பாட்டி ஊர்காவற்றுறை)

தம்பாட்டி ஊர்காவற்றுறையைச்சேர்ந்த காலஞ்சென்ற பொன்னையா திருமதி நாகம்மா தம்பதிகளின் அன்பு மகன் துரைசிங்கம் அவர்கள் 11-4-1994 அன்று காலமாகிவிட்டார். இவர் பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், அசோக்குமார், அரசராணி, இரத்தினகுமார் (பிரான்ஸ்) செல்வகுமார், சிவகுமார், இந்திரகுமார் சந்திரகுமார் (போராளி -இசைஅமுதன்), இரவிக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரிகா தேவி, அழகுசீலன், செல்வராணி (பிரான்ஸ்) சாரதா தேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று 12-4-1994 செவ்வாய் நடைபெற்று 11. 00மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
து. அசோக்குமார்
(மகன்)

111, பெரியதம்பிரான் கோவிலடி,
வட மேற்கு வண்ணார்பண்ணை.

(8010)